Registered as a Newspaper

S.M.Fernando
OPTICIANS
SIGHT TESTED PRESCRIPTIONS ACCURATELY DISPENSED
580, HOSPITAL ROAD, NEAR BANK OF CEYLON JAFFNA.

# உதயன்

விலை ரூபா 3-50

கண் வைத்திய நிபுணர்களினால் சிபார்சு செய்யும் கண்ணாடி களைச் சரியாகக் கொடுப்பவர்கள்.
எஸ்.எம்.பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கி அருகாமை யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத வரு வைகாசி மீ 10 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால்பிறை 28 (24 05 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 94

# புலிகள் பற்றிய கேள்விக்கு பதிலளிக்க ரஞ்சன் மறுப்பு!

## சபையை விட்டு வெளியே சென்றார்!!

கொழும்பு, மே 24

தமிழீழ விடுதலைப்புலிகள் சம்பந்தமான கேள்வி எதற்கும் நடாளுமன்றத்தில் பதில் கூறமுடியாது என்று தெரிவித்துவிட்டு — பாதுகாப்புத் துணைஅமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னா, நேற்று சபையைவிட்டுவெளியே சென்றார்!

நேற்று நாடாளுமன்றத்தில், ஒத்திவைப்புவேளையில்; சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம் பி. ஒருவர், விடுதலைப்புலிகளைச் சம்பந்தப்படுத்திக் கேள்வி எழுப்பினார்.

அதனைத் தொடர்ந்தே அமைச்சர்திரு. விஜேரத்தினா தமது கோவையையும் எடுத்துக்கொண்டு சபையைவிட்டு வெளியே போனார்!!

நாடாளுமன்றம் நேற்றுக் காலை சபாநாயசர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது தலைமையில் கூடியது. நிகழ்ச்சிகள் நடந்து ஒத்திவைப்பு நேரம் வந்தது.

அப்போது சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எம்பியான திரு. நிமால்சிறீபால டி சில்வா பின்கண்டவாறாகத் தெரிவித்தார்:-.

கல்முனையில் பொலீஸ்காரர்கள் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டிருக்கி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 2 முகாம்கள் மூடப்பட்டன

கொழும்பு, மே 24

திருகோணமலை மாவட்டத்தில் பன்குளத்தில் உள்ள இலங்கைஇராணுவ முகாமும், பாலம்போட்டாறில் உள்ள இலங்கை இராணுவ சோதனை முகாமும் கடந்த செவ்வாய்க்கிழமை மூடப்பட்டன.

அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையே நடத்தப்பட்ட பேச்சுகளின் பலனாக இவை மூடப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

## மாணவர் விவரம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், மே 24

மாணவர்களுக்கு உணவு முத்திரை வழங்குவது தொடர்பாக சகல பாடசாலை அதிபர்களிடமிருந்தும் மாணவர் விவரம் கோரப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பு ஆணையாளரிடமிருந்து வந்த சுற்று நிருபம் ஒன்றின் அடிப்படையிலேயே இந்த விவரங்களை அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் கோரியுள்ளனர்.

விவரங்களை உடனடியாக திரட்டி அனுப்பி வைக்கும்படி சுற்றுநிருபத்தில் கோரப்பட்டிருக்கிறது. (இ - 9)

## பாடசாலைகளில் திருட்டு

யாழ். மாவட்டத்திலுள்ள 3 பாடசாலைகளில் பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளன. கடந்த நான்கு தினங்களில் இத்திருட்டுக்கள் இடம் பெற்றுள்ளன.

வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், சென்-சார்ள்ஸ் பாடசாலை ஆகியவையே இந்த மூன்று பாடசாலைகளும் ஆகும். (இ 9)

## சாவகச்சேரி கோட்ட கல்வி அலுவலகம்

யாழ்ப்பாணம், மே 24

சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகம் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை திறக்கப்படும்.

யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளரும் வடமாகாண கல்விப்பணிப்பாளருமான, இ. சுந்தரலிங்கம் இதனைத் திறந்து வைப்பார். (இ - 9)

## அசிட் வீச்சு பெண்கள் காயம்

அசிட் வீச்சுக்கு இலக்கான வட்டுக்கச்சியைச் சேர்ந்த இரண்டு பெண்கள் யாழ் - ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயம் அடைந்தவர்கள் ரவீந்திரகுமார் கனகராணி (வயது 21), கே. உமாபதி (வயது 11).

குடும்பத்தகராறே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (இ - 10)

## வட்டிச்சலுகை நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 24

மக்கள் வங்கியால் அடகு நகை மீளளிப்புத் தொடர்பாக வழங்கப்பட்ட 15 வீத வட்டிச் சலுகை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர் வரும் ஜூன் 30 ஆம் திகதி வரை சலுகை நீடிப்பு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ - 9)

### மலையகத் தமிழர் பிரச்சினை:

## பிரேமா - வி.பி.சிங் பேச்சு நடத்திய பின்னரே நடவடிக்கை

இந்தியப் பிரசா உரிமை பெற்ற ஒரு லட்சம் தோட்டத் தொழிலாளர் பற்றி ஜனாதிபதி பிரேமதாஸாவும் பிரதமர் வி. பி. சிங்கும் பேச்சுக்கள் நடத்தி ஒரு முடிவுக்கு வருவர்.

அதுவரைக்கும் இதுகுறித்து விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்திருக்கிறார்.

தம்மைச் சந்தித்த ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தூதுக்குழுவிடமே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இத்தூதுக்குழுவில்ஜ.தொ.கா. பொதுச் செயலாளர் வி. பி. கணேசன் உட்பட பலர் அங்கம் வகித்தனர். [அ-எ]

## கோட்டைக்கு வெளியே

யாழ்ப்பாணம், மே 24

யாழ். பொலீஸ் சுப்பிரின்டன் அலுவலகம் கடந்த 14 ஆம் திகதி முதல் யாழ்.கோட்டைக்கு வெளியே இயங்க ஆரம்பித்துள்ளது.

கடற்கரைப் பகுதியில் பொலீஸ் விடுதி அமைந்துள்ள கட்டடத்தில் இது தற்போது இயங்குகிறது. (இ-10)

## திவ்வியநாதனை ரெலோவில் மீண்டும் சேர்ப்பதற்கு முடிவு

யாழ்ப்பாணம், மே 24

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்திலிருந்து[ரெலோ]சென்ற வருடம் வெளியேற்றப்பட்ட திரு. திவ்வியநாதன் எம். பி, மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

சென்ற வாரம் நடந்த ரெலோ தலைமைக்குழுக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் அதன் தலைமைத்துவம் தொடர்பாகவும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதுவரையில் தலைவர்-செயலாளர் ஆகிய இரண்டு பொறுப்புக்களையும் உள்ளடக்கியிருந்த செயலதிபர் பதவிக்குப்பதிலாக, தலைவர்-உபதலைவர்கள்- செயலதிபர் என்ற ரீதியில் புதிய முறையில் தலமைத்துவம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. நிர்வாக செயலாளர் என்ற பொறுப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



தொடர்ந்து ரஞ்சன் பாடு சிக்கலாய்க் கிடக்கு பார்த்தியளே . . . . !

## சுப நேரம்

24- 5 - 90

வியாழக்கிழமை வைகாசி 10

சுபநேரம் ;
07.22 - 08. 52

இராகுகாலம்
01·22 - 02.52

அமாவாசை - கார்த்திகை விரதம்

## இ. காங்கிரஸ் எம். பிக்களுடன் ஈ. பி. ஆர். எல். எவ். சந்திப்பு

புதுடில்லி தமிழ்நாடு இல்லத்தில் சில இந்திராகாங்கிரஸ் எம்பிக்களை ஈ. பி. ஆர். எல். எவ். போராளிகள் பிரதிநிதிகள் சிலர் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

இப்படி இந்தியப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன.

இந்திராகாங்கிரஸ் எம்பி அன்பரசு உட்பட சில எம்பிக்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனராம். (இ-எ)

## மலையக தொழிலாளர்களை இந்திய அரசு ஏற்கக் கூடாது

### ராஜ்யசபையில் கோபாலசாமி

புதுடில்லி, மே 24

இலங்கை அரசு திருப்பி அனுப்பும் மலையகத் தோட்டத் தொழிலாளரை இந்திய அரசு ஏற்கக்கூடாது. அந்தத் தோட்டத் தொளிலாளருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்க வேண்டும்.

தி. மு. க எம். பி. வை. கோபாலசாமி ராஜ்யசபையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

1964 இல் செய்துகொள்ளப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் இலங்கைத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு விரோதமானது.

நூறாண்டு காலமாக இரத்தம் சிந்தி உழைத்த மண்ணில் அந்தத் தமிழருக்குக் குடி உரிமை வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு லட்சம் தோட்டத் தொழிலாளரைஇலங்கை அரசு அனுப்ப முயல்வதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஆசை காட்டி அழைத்துவரப்பட்ட மலையகத் தமிழர் தமிழ் நாட்டில் இன்று நரக வாழ்வு வாழ்கின்றனர்.

இனக்கலவரம் காரணமாக தமிழகம் வந்த இலங்கைத் தமிழரையும் இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இப்படி கோபால்சாமி சொன்னார். (இ-எ)

## அமெ. தூதரக அதிகாரிகள் விடுதலைப்புலிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 24

அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கும்- விடுதலைப் புலிகள் பிரமுகர்களுக்கும் இடையே கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட காரியாலயத்தில் நேற்று சந்திப்பு ஒன்றுஇடம் பெற்றது.

அன்ரன் பாலசிங்கமும், அமெரிக்கத் தூதரக முதலாவது அரசியல் செயலாளர் மேல் ஹெராட், மற்றும் பிரஸ்தாப பதவிக்கு அடுத்த ஆகஸ்ட் முதல் நியமிக்கப்பட உள்ள செல்வி லோறா ஆர், லுவ்டிக் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

வடக்கு- கிழக்கின் அரசியல் நிலைமை பற்றி இந்த சந்திப்பில் கருத்துகள் பரிமாறப்பட்டன. (இ-9]

### வடக்கு - கிழக்கில் நடந்த

## ஆரம்ப ஆசிரியர் நியமனம்; ரத்துச் செய்ய உத்தரவு!

கொழும்பு, மே 24

வடக்கு-கிழக்கில் செய்யப்பட்ட 350 க்கும் மேற்பட்ட ஆரம்ப ஆசிரியர் நியமனங்களை உடனே ரத்துச் செய்யும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நியமனங்கள் செய்யப்பட்ட விதத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் பற்றி விசாரணை செய்ய இரகசியப் பொலீஸாருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நியமனங்கள் சம்பந்தமான கோவைகள் கல்வித் திணைக்களத்தில் இருந்து காணாமற் போய்விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

1988 ஆம் ஆண்டில் பிரஸ்தாப ஆரம்ப ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. [அ-எ]

## ஜீ.சி.ஈ உயர்தர பரீட்சை: திட்டமிட்டவாறு ஆகஸ்டில்

கொழும்பு, மே 24

ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சை திட்டமிட்டவாறு எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்படும். அது ஒத்திவைக்கப்பட மாட்டாது. பரீட்சையை ஒத்திவைக்க எந்தவித காரணமும் இல்லை.

இவ்வாறு அறிவித்திருக்கிறார் கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி.

நாடாளுமன்றத்தில், எடுக்கப்பட்ட கோரிக்கை ஒன்றுக்கு நேற்றுப் பதிலளிக்கையிலே அமைச்சர் மேற்கண்டவாறு திட்டவட்டமாகச் சொன்னார்-

இம்மாதம் 18 ஆம் திகதி சபை கூடிய போது, ஐக்கிய சோஷலிச முன்னணி எம்.பி திரு. அத்தாவுட செனவிரத்தினா ஜி.சி ஈ உயர்தரப் பரீட்சையை டிசம்பருக்கு ஒத்திப்போட வேண்டும் என்று கேட்டிருந்தார்.

கடந்த வருடம் வன்செயல்களும், அசம்பாவிதங்களும், நடந்ததால் நீண்ட காலம் பாடசாலைகள் நடைபெறவில்லை. அதனால் மாணவர்கள் பாடங்களை முற்றாக பயின்று கொள்ள முடியவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். (அ-2)

### ஜனாதிபதியின் பதிலுடன்

## ஹமீத் மீண்டும் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், மே 24

வடக்கு - கிழக்கு சமாதான குழுத் தலைவரும், நீதி அமைச்சருமான ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வர விருக்கிறார்.

இந்தத் தகவலை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்றுத் தெரிவித்தார். கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இங்கு நடைபெற்றபேச்சுவார்த்தையின்போது விடுதலைப் புலிகள் சார்பில் பல்வேறு கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருந்தன.

ஜனாப் ஹமீத் எதிர்வரும் 28 ஆம் திகதி மீண்டும் யாழ்ப்பாணம் வரும்போது விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதியின் பதிலுடன் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வடபகுதி வைத்தியசாலைகளுக்கான

## பிரிட்டிஷ் உபகரணங்கள் அடுத்த மாதம் வந்து சேரும்

யாழ்ப்பாணம், மே 24

பிரிட்டிஷ் அரசினால் வடபகுதி வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட இருக்கும் நவீன உபகரணங்கள் அடுத்தமாதம் அளவில் யாழ்ப்பாணம் வந்து சேரும்.

வட பகுதி வைத்தியசாலைகளுக்கான இந்த உபகரணங்கள் 70 கொள்கலன்களில் கப்பலில் ஏற்றப்பட்டுள்ளன.

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## இவர்களும் புலிகளை சந்திப்பர்

யாழ்ப்பாணம், மே 24

யாழ். நகருக்கு விஜயம் மேற்கொள்ள உள்ள பிரிட்டிஷ், கனேடிய, ஆஸ்திரேலிய நாடுகளின் தூதுவர்கள் விடுதலைப் புலிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளனர்.

இந்த தகவலை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் தூதுவர் இன்று யாழ்ப்பாணம் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கனேடிய, ஆஸ்திரேலியத் தூதுவர்கள் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருவார்கள். (இ-9)

## ரூ 150 கோடி குறை நிரப்பு பிரேரணை

கொழும்பு, மே 24

பாடசாலை மாணவருக்கு உணவு முத்திரை வழங்கும் புதிய திட்டத்தை அமுல் நடத்த தேவையான 150 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டுக்கான குறைநிரப்புபிரேரணையை நாடாளுமன்றம் நேற்று ஏற்றுக் கொண்டது.

இப் பிரேரணையை கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி சபையில் சமர்ப்பித்தார். (இ-எ)

## ஹரியானா முதல்வராக குப்தா

சண்டிகார், மே 24

ஹரியானா மாநிலமுதலமைச்சராக திரு. பி.குப்தா நேற்று மாலை பதவி ஏற்றார்.

திரு.ஓம்பிரகாஷ்சௌதாலா முதலமைச்சர் பதவியை நேற்று முன்தினம் ராஜினாமாச் செய்திருந்தார்.

அந்த இடத்திற்கு திரு. குப்தாவை ஹரியானா சட்டசபை ஜனதா தள் கட்சிநேற்று தெரிவு செய்தது. (எ)

## பசளை விலை குறைப்பு

கொழும்பு, மே 24

பசளை வகைகளின் விலை குறைக்கப்பட்டது.

உடனடியாக இது அமுலுக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மெட்ரிக் தொன் உரத்தின் விலை 620 ரூபாவால் குறைக்கப்படுவதாக விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சர் தர்மதாஸா பண்டா அறிவித்தார். (இ-எ)

## மட்டக்களப்பில் ராக்கிங்

மட்டக்களப்பு, மே 24

மட்டக்களப்பில் புதிதாக பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ள மாணவ மாணவிகள் மீது ராக்கிங் நடத்தப்படுகிறது.

பாடசாலைகள், கச்சேரி, பஸ் நிலையம் போன்ற இடங்களில் ராக்கிங் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-ரி]

## உணவு முத்திரை பற்றி மாநாடு

யாழ்ப்பாணம், மே 24

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவுக்குப் பதிலாக உணவு முத்திரை வழங்கும் திட்டம் தொடர்பான மாநாடு இன்று கொழும்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த [Crimson Globe] பீட்றூட் விதை, விவசாய ஆய்வுகூட அனுமதி பெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது விற்பனைக்கு உண்டு பிள்ளையார், 259' காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3490)

### திருமணஅழைப்பு கார்ட்டுகள்

புதிய அச்சடிக்கும் திருமணக்காட்டுகள் சகலடிஸைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய, ஸ்ரீகாந்த்- புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம் (C/5033)

### மணமகன் தேவை

யாழ் நகர் கல்லூரியில் ஆசிரியையாக பணிபுரியும் 28 வயதான யாழ் இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த ஆசிரியைக்கு அரசாங்க உத்தியோக மணமகன் தேவை. 129, மே/பா, உதயன். [13256]

### வாப் ஓடுபவர் தேவை

மின்தறி நெசவாலைக்கு வாப்ஓடுபவர் தேவை. 28/5/90 காலை 9 மணிக்கு நேரில் சமூகம் கொடுக்கவும். ஸ்ரீராஜ் இன்டஸ்றீஸ் வட்டு கிழக்கு, சித்தன்கேணி. (3701)

### நெசவாளர் தேவை

கைத்தறியில் நெசவு செய்ய அனுபவமுள்ள பெண்கள் தேவை. ஆண்களும் தோற்றலாம். சாப்பாடு, தங்குமிட வசதியுடன் நல்ல சம்பளமும் வழங்கப்படும். ''ஏலிம்'' சிறுவர் இல்லம், மெமோறியல் ஒழுங்கை, மானிப்பாய். [3492]

### கடை வாடகைக்கு

சுன்னாகம் பழைய பொலிஸ் நிலையத்திற்கு அண்மையிலுள்ள கடை வாடகைக்கு விடப்படும். அத்துடன் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு லீலா பான்சி பலஸ், 105 A, K. K. S. றோட், சுன்னாகம். (3496)

### தவறிவிட்டது

முகம்மதலி அமீன், 3 ஆம் வட்டாரம், எருக்கலம்பிட்டி, மன்னார் - என்பவருடைய அடையாள அட்டை யாழ். மாநகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் விநாயகர் கூல்பார், A. A. 24, பஸ் நிலையம். யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3498)

### கோழிக்குஞ்சுவிநியோகம்

ஒரு மாத Hylineவெள்ளை சிவப்பு, கறுப்பு, பேட்டுக் குஞ்சுகள் (தடுப்பூசி போடப்பட்டது) விற்பனைக்குண்டு சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி, லேன். கொக்குவில் [3499]

### ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை

பலரின் வேண்டு கோளுக்கிணங்க ஆண்டு 5 புலமைப் பரிசில்முன்னோடிப் பரீட்சைகள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 3 மணி முதல் 5 மணிவரை நடைபெறவுள்ளன. ஆரம்பம் 27-5-1990 விபரங்களுக்கு செல்வி எஸ். எஸ். ஐயர் 12, (36) வைமன் வீதி.நல்லூர். (13244)

### வீடு தேவை

அரச சேவையில்உயர்பதவி வகிக்கும்ஒருகுடும்பத்தவருக்கு யாழ் நகரில் ஒரு தனி வீடு வாடகைக்குத் தேவை. C/o No. 130 உதயன். (13243)

### காணவில்லை

பாலன் முருகுப்பிள்ளை திருகோணமலையைச் சேர்ந்தவர் உயரம்5'' அடி மாநிறம் கடைசியில் காணப்பட்ட போது அரைக்கால்சட்டை வெள்ளைக்கோடிட்ட சேட்டும் அணிந்திருந்தார். புத்தி சுவாதீனம் அற்றவர். தொடர்பு: கோணாமலை, செல்லத்துரை கோணாமலை ஒழுங்கை கொக்குவில்கிழக்கு. [13245)

### Wanted

Wanted M. B. B. S. Doc-tor. for Sairam Clinic. call over with certificates this week between 10 - 11 a. m at 410, Kankesanthurai Road, Jaffna. (13249)

### தவறிவிட்டது

கனடாவில் இருந்துசின்னத்தம்பி ஆறுமுகம் என்பவரால் அனுப்பப்பட்ட 100 டொலர் காசோலை வாடியடியில் தவறி விட்டது தயவு செய்து கண்டெடுத்தவர்கள்சி செல்வராஜா, கறுக்காய்தீவு, பூநகரி என்ற முகவரிக்கு அறியத் தரவும். (வங்கியில் யாராவது மாற்றி இருந்தால் அறியத் தரவும். (3702)

## A. A. T and I. A. B

EXAMINATION - DEC. 1990

A. A. T — Prelim
A. A. T — Sri Lanka
I. A. B — Stage I

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 26 - 05 - 1990

★ CIMA, Sri Lanka Chartered Accountant ஆக இலகு பயிற்சி நெறி

★ G. C. E (சாதாரண தரத்துடன்) அல்லது 2 வருட கணக்கியல் அனுபவத்துடன் பயில இயலும்.

[CIMA Stage I வகுப்புகள் 19-05-90 முதல் ஆரம்பமாகி உள்ளன. Stage II Stage III A. A. T மற்றய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன.]

மேலதிக விபரங்கட்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

(Result Oriented Institute in North)
14, St. Peters Lane, Hospital Road, Jaffna.

[சி-4567]

## வேறுமாவட்ட மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பம்; திருமலை மாணவர் ஆட்சேபம்

திருமலை மே 24

வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஜீ. சீ. ஈ உயர்தர வகுப்புப் பரீட்சைக்கு திருமலையில் விண்ணப்பிக்க முயற்சிப்பதாக திருகோணமலை உயர்வகுப்பு மாணவர்கள் திருகோணமலை மாவட்ட கல்விப் பணிப்பாளரிடம் முறையிட்டுள்ளனர்.

கடந்த வாரம் திருகோணமலை மாவட்ட உயர் வகுப்பு மாணவர்கள் கல்விப் பணிப்பாளரிடம் நேரில் சென்று தமது முறைப்பாட்டை தெரிவித்தனர். (இ-155)

## விற்பனைக்கு

1. ''USHA'' Bottle Coolers
2. ''GLACIO'' Fridge, மண்ணெண்ணெயிலும் மின்சாரத்திலும் இயங்கக் கூடியது
3. Remington, Olivetti, Kofa & Underwood Typewriters
4. நகைக்கடை அல்லது ஆய்வு கூடங்களுக்கு உபயோகமான தராசுகள்
5. Hot Air Ovens
6. மேசைகள், ஸ்ரூல்கள், சாப்பாட்டு அலுமாரிகள்
7. Air Conditioner
8. ஹோட்டல்களுக்கு உகந்த Sanyo இறைச்சி அரைக்கும் மின்சர் மற்றும் பல

**ஜெயாஸ் ஒக்ஷன் மாட்**

161, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

[3625]

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிரியை அழைப்பும்



அமரர்

### திரு. சரவணமுத்து தங்கராசா

(பிரபல வர்த்தகர், ஐயர் கடை உரிமையாளர். கொழும்புத்துறை)

அன்னையின் மடியில்: 16 - 07 - 1940
இறைவன் அடியில்: 24 - 04 - 1990

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்ட எங்கள் ஆருயிர் இதய தீபமே! எங்கள் இல்லத்தில் மங்காத ஒளி வீசி எங்களுக்காக வாழ்ந்து எல்லா வகையாலும் உறுதுணையாக நின்று எங்களை வாழ வகுத்து மங்காத ஜோதியாக நின்ற அருமைத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் இன்னும் எங்களுடன் வாழ்ந்து கொண்டே இருக்கிறீர்கள். உங்கள் ஆத்மா சாந்திடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று 24 - 05 - 1990 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். 27 - 04 - 1990 இல் நடைபெற்ற ஈமச்சடங்கின் போது கலந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் மலர்வளையம் சாத்தியோர்கட்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்:
மனைவி, மக்கள்.

இல. 19, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (3626)

## விளையாட்டு அபி. சபை நிர்வாகிகள்

சாவகச்சேரி மே 24

விளையாட்டுத்துறையை அறவழிக்கிராமங்களில் அபிவிருத்தி செய்யும் பொருட்டு அறவழிப்பணி மனையில் ''அறவழிவிளையாட்டு அபிவிருத்திச்சபை'' ஒன்று அங்குரார்ப்பணம்செய்யப்பட்டது.

இச் சபையின் தலைவராக திரு பொ. கந்தையாவும், செயலாளராக திரு. அ. சிவலிங்கமும் நியமிக்கப்பட்டுள்ளார்.

உறுப்பினர்களாக திரு என் கே. துரைசிங்கம், திரு. மு. மார்க்கண்டு, திரு. என்.பரமசாமி, திரு. க. பூபாலசிங்கம் திரு. க. ஜீவகதாஸ், செல்விகள் வீ. தர்மினி, பொ. மதிவதனா, அ. ஜெயலதா ஆகியோர் தெரிவாகினர். (க-31)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### கார்த்திகேசு - பொன்னம்பலம்

(விசுவலிங்கம்) அவர்கள்

மண்ணில் வரவு: 07 - 03 - 1917
விண்ணில்செலவு: 24 - 04 - 1990

எங்கள் குடும்பத்தலைவராயும், குலமுதல்வராயும் இருந்து எங்களை நல்லாற்றுப்படுத்தி உயர்நிலையில் இருக்க ஆளாக்கிவிட்டவரும், வாழ்வில் எமக்கு எவ்விடத்தும் எப்போதும் ஒளிவிளக்காய் வழிகாட்டி உறுதுணையாக நடந்தவரும், இதயக் கோயிலில் இருத்தி நாம் என்றும் பூசிக்கத்தக்க புனிதராய் விளங்கியவரும், ஆகிய திரு. கா. பொன்னம்பலம் அவர்களது அந்தியேட்டியும், சபிண்டியும் 24 - 05 - 90 திகதி வியாழக்கிழமை எங்கள் இல்லத்தில் நிகழும். அவ்வமயம் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியயாவரும் கலந்து கொண்டு அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் மதியஉணவிற் கலந்துகொள்ளுமாறும் வேண்டுகிறோம்.

சர்வலோக சரண்யனாகிய சபாநாயகப்பெருமான் பாத நிழலில் பரமசுகமளித்து அவரை ஏற்றருளுமாறு ஏத்தி இறஞ்சுகிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புதுவளவு,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (சி/ 4565)

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சபாபதி அன்னபகவதி

தோற்றம்: 11 - 04 - 1940
மறைவு: 14 - 05 - 1980

ஆண்டுத் திதி: 24 - 05 - 1990

எங்கள் அன்புத் தெய்வமே இத்தினத்தில் தங்களுக்கு அஞ்சலி செலுத்தி தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்புக்கணவன்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை.

அரசடி றோட்,
தஞ்சிலேன்,
யாழ்ப்பாணம். [13250]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி





### செ. பரமேஸ்வரி

தோற்றம்: 27 - 09 - 1935
மறைவு: 27 - 05 - 1987

### மு. இராசதுரை

தோற்றம்: 12 - 01 - 1907
மறைவு: 27 - 05 - 1987

திதி: 24 — 05 — 1990 வியாழக்கிழமை

அன்புத் தெய்வங்களே!

எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு எம்மைப் பிரிந்து வருடங்கள் மூன்று ஆகினாலும் உங்கள் நினைவு எம்மனதை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள். பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. [3614]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 06-01-1931

●

மறைவு: 24-05-1987



### திரு. ம. பொ. சிவநாதன்

(பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனம்)

வறுத்தலை விளானைப் பிறப்பிடமாகவும், கண்டுக்குளியை வதியிடமாகவும் கொண்ட, எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயில்கொண்ட அன்புத் தெய்வமே உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை எந்நாளும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்;
மனைவி. ஞானபுஷ்பம்,
மகள்: செறின்.

54/2, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (3608)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA ENGLISH ACADEMY

ALUXINTENEBRIS

### MESSAGE FROM THE BRITISH HIGH COMMISSIONER



**The teaching of the English Language is one of the British Government's highest priorities in Sri Lanka. The Jaffna English Academy is making a valuable contribution to this effort. As the situation in the country at last returns to normal, I am confident that our historic ties with Jaffna will be strengthened. The dedication of teachers and students alike at the Jaffna English Academy is a shining example of their determination to overcome the troubles which have beset the country and, through the process of education, to bring about a better and more fulfilled life for the whole community.**

David Gladstone
( British High Commissioner )

30 April 1990

## Why we started Jaffna English Academy

Our first reason for starting Jaffna English Academy is what we may, we hope without presumption, call philanthropic. English was unfortunately for a long time been a language which, as the Needham Report points out, has led to undesirable social distinctions and prestige cults. In other words, people who habitually use English are supposed to be of a higher caste or of a higher status than those who habitually use Tamil or Sinhala. It is our purposeful aim to make our students rich products of efficient bilingualism. A teacher need not be a genius. It he or she can detect genius in his or her pupils and stimulate that genius, it will be the crowning glory of his or hercareer. Hence, even if the teacher fails to be such a rich product as aforesaid, his/ her failure will prove the pillars of his / her pupils' successes Such a labour of love will not be tn vain. Although one of he major reasons for replacing English by Swabasha was the conviction that such a procedure would equalize educational opportunities and thereby remove the privileged position enjoyed by the small English educated class, we feel that this major objective was defeated and all were, in the process of becoming mere frogs in the well of Sri Lanka, if we allow a narrow spirit of nationalism to blind especially the young of Sri Lanka to the outstanding advantages of studying English along with Swabasha. English, is the only gateway to world heritage and culture and to the world's great epics.

Our second reason is patriotic. We dare say this in spite of the fact that patriotism has become in these evil days, as the great Doctor Johnson once said, the last refuge of a scoundrel. Yet, if teachers do not believe in patriotism, they will make shipwreck of our present and of our future and disgrace our storied past. So we repeat that our second reason is patriotic. The posturing politicians have torn the country by unnecessary, irrational and suicidal communal conflicts. We believe that the English Language is the only feasible method of reconciling these unnecessary warring factions.

We firmly believe that by teaching English in the way an expert or specialist alone can teach it can build a vital bridge of peace between tense groups who are at daggers drawn with each other. Such a bridge is more to be desired than rubies and will, we assert, be a more useful achievement than landing on the moon.

Our third reason is the desire for self-improvement. If a thing is worth doing it is worth doing well. We realize that by specialising in teaching English, we shall be fitter to teach English as it should be taught that if we were an amateur teaching English in an amateurish way. Professor Skeat once cracked a classical joke about amateurs who think that they can drive, derive. The former litter the streets with accidents (tragic and otherwise) and the latter fill our motherland with equally tragic linguistic accidents. Teaching is no amateur activity. Specialization is necessary. We enjoy teaching English and our enjoyment is doubled by being competent in the teaching of English. Teaching is one of the noblest of professions for there cannot be anything noblar than to teach "the young idea how to shoot".

– **Kandiah Navarendran** –

★

### MESSAGE FROM GOVERNMENT AGENT



*I have great Pleasure in sending this message to a souvenir being published by the Jaffna English Academy on the occasion of their Certificate Award Ceremony. The Academy was started in 1988 for the Purpose of helping the Ordinary Level and Advanced level students not merely to prepare themselves for examinations but also to enable them to understand and benefit from the richness of the English language. The present attention that is being paid to the teachig of English is hardly sufficient even to have a basic understanding and knowledge of the English language. It is in this context that the effort of an Institution like the Jaffna English Academy should be appreciated. It is very essential that if our future generations have to make an impact on our society whether in the profession or in other related activities a knowledge of English becomes indispensable. In fact many of our people are working abroad and continue to fiad employment in other countries mainly because of their fluency in the English language. It is therefore the duty of all of those who are keen to develop the English language to encourage and support the efforts of an Academy like theJaffna English Academy, I wish them all the best for the future and I hope that they will continue to serve the needs of all aspiring students to learn English.*

**Anton Alfred**
Government Agent
Jaffna District

8th May 1990

## ESOL (English for Speakers Of Other Languages) CERTIFICATE AWARD CEREMONY
## TODAY THURSDAY 24th MAY 1990 AT St. JOHN'S COLLEGE HALL AT 4 P. M.

**Chief Guests:** His Excellency the British High Commissioner **Mr DAVID GLADSTONE & MADAM APRIL GLADSSTONE**

### ENGLISH FOR SPEAKERS OF OTHER LANGUAGES
### ESOL PASS LIST

**INTERMEDIATE**

**Ist CLASS PASS**

Ponmalar Krishnapillai
Premi Sivabalasundram
Rajini Manikam
Dhamayanthi Rasarathinam
Vasuvatha Thillainathan
Malarvily Mariathas
Kosalai Murugiah
Maria Judine Harshi Theophilus
Kanagasabapathy Arulmoly
Sathasivam Tharmarasah
Somasundram Eclanesan
Nadarajah Nimalan
Kanagasabapathy Elanco
Nadarajah Maneeswaran
Yasotha Mahadeva
Jennifer Subothini Anthonipillai
Anuratha Thurairajah
Anusooya Nadarajah
Uma Muthuthamby
Sarojinidevi Gunasingham
Nirmala Joseph
Markandu Thirunavukkarasu
Sutharsan Thiruneelakandan
Dharshini Shanmugalingam
Manickkavasagar Vickneswaramoorthy
Jeyarani Kandiah
Vijaya Ponnuthurai
Umaiyal Thuraisamy
Banumathy Shandrasekeri
Mansula Nadarajah
Rachel John
Kalaivani Balasubramanium
Baheerathan Ganeshan
Vasuki Rasiah
Jeyanthy Rajaratnam

**PASS**

Thirunavukkarasu Sutharshlni
Sunbralingam Kuruparan
Bavani Balasingam
Ka[illegible]any Navaratnam
Gowry Sandrasegara
Sasikala Sathananthan
Rajendrarajah Rajkumar
Selladurai Thevaranjan
Aananthie Ponnuthurai
Renuka Thanabalaratnam
Sathananthan Aravinthan
Chinniah Ratnavadivale
Vijayakumari Panchadcharam
Sugirthacumary Saravanapavananthan
Mary Anne Shyamala Devasagayam
Rajamithiran Thirunavukkarasu
Julian Lenard Roshan
Durvasan Ambalavanar
Yasotha Duraisamy
Premala Edward
Arulpragasam Gabriel
Pancras Noel Robinson
Thirumagal Gunanayagam
Jenet Packiyanathan

**HIGHER INTERMEDIATE**

**Ist CLASS PASS**

Dhamayanthi Rasarathinam
Shanthikumar Ariyaratnam
Ruth Jebaranjini Ariyaratnam
Nadarajah Nimalan

**PASS**

Yasotha Mahadeva
Uma Muthuthamby
Kalarani Navaratnam
Kosalaj Murugiah
Sathananthan Aravinthan
Somasundram Eelanesan
Sathasivam Tharmarasah
Pararajasingam Noel Sevakumar
Nadarajah Maneeswaran
Thayaarany Navaratnam
Premi Sivabalasunderam
Vasuvatha Thillainathan
Kanagasabapathy Arulmoly
Renuha Thanabalaratnam
Selladurai Thevaranjan
Sarojinjdevi Gunasingham

(Cont. on Page 8)

### COURSES AVAILABLE AT JAFFNA ENGLISH ACADEMY.

**ESOL ( English for Speakers Of Other Languages ) - London**

Assessment of Answerscripts and Awards of certificates from PITMAN EXAMINATIONS INSTITUTE LONDON.
- ✱ World wide recognition.
- ✱ Examinations held at Jaffna English Academy.

Week – End classess - 10 to 11.30 a.m.

**Week - Day batches:**
1) Tuesdays - 2 to 5 p.m
2) Wednesdays & Fridays - 3 to 5 p.m.
3) Mondays & Thursdays - 4 to 5.30 p.m.

( commencement 31 - 5 - 90 )

**EBC (English for Business Communications) - London**

A course specially designed to enhance the candidates' skill in using the English Language in business and professional correspondence.
Assessment of answerscripts and Awards of certificates from Pitman Examinations Institute London.
- ✱ World wide recognition.
- ★ Examinations held at Jaffna English Academy.

Classes only on Saturdays – 3 to 5 p.m.
( commencement - 2nd June 1990 )

**Spoken English ( For adults )**

Week – End – 11.30 to 1.00 p.m.
Mondays & Wednesdays - 8 30 to 10.30 a.m.
Tuesdays & Thursdays - 8.30 to 10.30 a.m.
( Commencement 5th June 1990.)

**TOEFL ( Test Of English As A Foreign Language )**
- ✱ Meticulous coaching.
- ✱ Highest score assured.
- ★ Unlimited hours of listening pratice provided.

Week - End lectures - 8 to 10 00 a.m.
Mondays & Thursdays - 2 to 4.00 p.m

**Higher English Course**
- ✱ Shakespeare's Romeo & Juliet.
- ★ Bernard Shaws Arms And The Man.
- ★ Selected Poems.
- ✱ George Eliot's Silas Marner.
- ✱ Arthur Miller's Death Of A Salesman.
- ✱ Essays.
- ✱ Modern Short Stories.
- ✱ Precise and Reading Comprehension.
- ✱ Letter Writing.

( Week - End lectures - 1 to 3.00 p.m. )

**Spoken English: ( Lower )**
Wednesdays – 4.00 to 5.00 p.m.
Saturdays – 4.00 to 5.00 p.m.

**Spoken English: ( Higher )**
Thursdays – 5 00 to 6.00 p.m.
Saturdays – 3.00 to 4 00 p.m.

**Elocution: ( Initial & Elementary )**
Thursdays – 4.00 to 5.00 p.m.
Sundays – 10.00 to 11 00 a.m.

**Elocution: ( Transitional & Grade 2 )**
Tuesdays – 4.00 to 5.00 p.m.
Wednesdays – 5.00 to 6.00 p.m.

**Elocution ( Grades 3 & 4 )**
Thursdays – 5.00 to 6.00 p.m.
Saturdays – 10.30 to 11.30 a.m.

**Class Work**

| | |
|---|---|
| Years 2, 3, & 4: | Saturdays & Sundays – 9.30 to 10.30 a.m. |
| Years 5, 6 & 7: | Sat. & Sun. 8.30 to 9.30 a.m. |
| Year 8: | Sat. & Sun. 7.30 to 8.30 a.m |
| Year 9 & 10 | Sat. & Sun. 6 30 to 7.30 a.m. |

## ALL ARE WELCOME

### THANK YOU

**We thank all those who responded to our invitation to send in entries for the poetry/ short story competition. We regret however that in the opinion of the judges none of the entries came up to the expected standard. Anyhow, a big Thank you to all those who took the trouble to send in their entries.**

**School of Business Administration**
16, Third Cross Street, Jaffna.

**Yarl Trades Centre**
11, Modern Market, Hospital Road, Jaffna.

**AMBIHAPATHY FANCY TRADERS**
9A, Modern Market, Jaffna.

**SAMUEL SONS & CO LTD**
206, 208, Hospital Road, Jaffna.

**Mini Trade Centre**
3, Stanley Road, Jaffna.

**G. S. Linganathan & Co**
79, K. K. S. Road, Jaffna.

**P. I. FERNANDO**
542, Hospital Road, Jaffna.

**UNIKCO COMPUTER CENTRE**
5, Power House Road, 2nd Lane, Jaffna.

**NOTHERN TELEVISION CENTER**
[illegible] Stanley Road, Jaffna.

**Nayagam's Stores**
8, Chundikuli, Jaffna.

**Radiant Institute**
Punkankulam-Ariyalai, Jaffna.

**William Harvey Memorial Hospital**
Chundikuli, Jaffna.

**M. BASTIAMPILLAI BOOK DEPOT**
390, Main Street, Jaffna.

**Kabil's Winding Work Shop**
Jubilee Bazaar, Jaffna.

**Nelliady Rice Mill**
Boundary Lane, Nelliady, Karaveddy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு முருகேசு சிவலிங்கம்**

தோற்றம்: 13 - 07 - 1913
மறைவு: 15 - 05 - 1988

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம். (3620)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
03 - 11 - 1931

மறைவு:
15 - 05 - 1988



**தம்பிமுத்து சபாரத்தினம்**
(கிராம சேவை அலுவலர்)

நல்லவராய், வல்லவராய், இனியவராய் எம்மை வாழ வைத்து விண்ணகம் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! தெய்வப் பெருவாழ்வு அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சோதி, வேம்படி ஒழுங்கை,
மானிப்பாய். (3526)

## பயிற்சி வகுப்புகள்

மானிப்பாய், மே. 24


சுன்னாகம் மயிலணி சனசக்தி சனசமூக நிலையத்தில் வாழைநார் உற்பத்திப்பயிற்சி வகுப்புகள் யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சி வகுப்புகளில் இப் பகுதியைச் சேர்ந்த இருபது இளம் யுவதிகள் கலந்து கொண்டு பயிற்சிபெற்று வருகின்றனர்.

வாழைநாரில் இருந்து பட்டு நூல், அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வது பற்றி இங்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. பிலிப்பீன்ஸ் நாட்டில் நேரடிப் பயிற்சி பெற்று வந்த போதனாசிரியர்களால் இவ் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

(க-90)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இ. நவரத்தினம்**
(இளைப்பாறிய இலங்கை வங்கி உதவி முகாமையாளர்)

தோற்றம்: 17 - 11 - 1930
மறைவு: 27 - 05 - 1987
திதி: 24 — 05 — 1990

ஆண்டுகள் பல கடந்தாலும் எமது உள்ளங்களில் உங்கள் நினைவுகள் உறைந்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி,
சகோதரன் பாதுகாவல் உத்தியோகஸ்தர்
மக்கள் வங்கி ஊர்காவற்றுறை

27/4, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். [13246]




# பஜாஜ் வாங்கி வெகுமதி பெறுங்கள்




பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்கும் உங்கள் ஆசைக் கனவை நனவாக்க இதுவே உன்னதமான சந்தர்ப்பம். ஏனெனில், தனித்துவமான பஜாஜ் வெகுமதிப் போட்டியில் கலந்துகொண்டு அற்புதமான பரிசுகளை வெல்லும் அரிய வாய்ப்பினை நீங்கள் பெறுவீர்கள்.

வெகுமதிப் போட்டி நாடளாவிய ரீதியில் கையிருப்பு முடியும் வரை நடத்தப்படும். ஆகவே, உங்கள் பஜாஜ் வாகனத்தை விரைந்து வாங்கிப் போட்டியில் பங்குபற்றுங்கள். பரிசுப் பட்டியலைப் பாருங்கள். எம்மிடமுள்ள புத்தம் புதிய பஜாஜ் வாகன வகைகளைப் பார்க்க வாருங்கள்.



போட்டி விதிகள்

1. றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட் அதன் உப நிறுவனங்கள் அதன் விளம்பர முகவர்களான தொம்ஸன் லங்கா லிமிட்டெட் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் தவிர்ந்த சகல இலங்கைப் பிரஜைகளும் இப் போட்டியில் பங்குபற்றலாம்.
2. கையிருப்பு முடியும் வரை மட்டுமே இப் போட்டி நடத்தப்படும்.
3. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. 4. கடிதத் தொடர்புகளுக்கு இடமில்லை.



1ம் பரிசு - பஜாஜ் சுப்பர் டிலுக்ஸ் ட்ரைஷோ
2ம் பரிசு - கவசாக்கி பஜாஜ் கே.பி.K.B. 100
ஒவ்வொன்றும் ரூ. 2,500/- பெறுமதியான உதிரிப் பாகங்களைக் கொண்ட 10 ஆறுதல் பரிசுகள்

**றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்**
69, அயிட் பார்க் கோனர், கொழும்பு-2. தொலைபேசி : 549480, 422149.

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஈழ மண்ணில்
30 | 11 | 1966



ஈழவர் மனதில்
24 | 05 | 1988

**கப்டன் நகுலன் (குழந்தை)**
**வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன்**
(கண்டாவளை)
(விடுதலைப் புலிகளின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர்)

நான் விடுதலையை நேசிக்கின்றேன்....................

எனது மண்ணும் மக்களும் சுதந்திரக் காற்றை சுவாசிப்பதை
பார்த்தபடி சுதந்திரமாக வாழ நான் விரும்புகிறேன்.
அடிமையாய் நூற்றாண்டு வாழ்வதைவிட சுதந்திர மனிதனாய் அரை
நொடியேனும் வாழ்வதையே நான் விரும்புகிறேன்.
வரலாற்றை உருவாக்குபவர்கள் சாவுக்கு அஞ்சுவதில்லை. அப்படி
அஞ்சியிருந்தால் விடுதலைபெற்ற பல தேசங்களை
நாம் இன்று கண்டிருக்க முடியாது.
எமது தேசத்தின் வரலாற்றை உருவாக்கும்
பணியில் நான் இறந்தால் அதற்காக நான் பெருமைப்படுவேன்.
ஏனென்றால் எனது தேசத்தின் சுதந்திரம் எனது
உயிரை விடவும் மகத்தானது.

— கப்டன் நகுலன்

உமது பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்**

நகுலன் அகம்
மந்துவில்.

அன்பகம்
கண்டாவளை

[3609]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வல்லரசுகளின் பலத்தை ஐரோப்பாவே நிர்ணயிக்கும்!

## சிங்கப்பூர் பிரதமர் பேட்டி

உலக வல்லரசுகளின் பலத்தை ஐரோப்பாதான் நிர்ணயிக்கப்போகிறது.

சிங்கப்பூர் பிரதமர் லீகுவான் யூ பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஐரோப்பிய சுற்றுப் பயணம் ஒன்றை திரு. லீகுவான் யூ திங்கள் ஆரம்பித்தார்.

வியாழக்கிழமை லண்டனுக்குப் புறப்படும் முன்னர் பாரிஸில் ஜனாதிபதி மித்தரண்ட், பிரதமர்மிச்செல் ரொக்கர்ட் ஆகியோருடன் சிங்கப்பூர் பிரதமர் பேச்சுக்கள் நடத்துவார்.

அவர் பேட்டியில் சொன்னதாவது;

தென்கிழக்கு ஆசியாவில் அமெரிக்கா தனது வலிமையை தொடர்ந்து வைத்திருக்க வேண்டும்.

ஸ்திரப்படுத்தக்கூடிய சக்தியாக அமெரிக்கா உள்ளது. அவர்கள் போனால் அந்த இடத்தை ஜப்பான் நிரப்பும். அப்படியானால் நாம் எங்கே நிற்போம்? '' --

இப்படி திரு. லீ கேட்டார்'

ஜப்பானின் பொருளாதார மற்றும் ராஜதந்திர முயற்சிகள் ஆசியாவுக்கு சாதகமாக உள்ளன. அமெரிக்காவின் தேச சக்தியாக கேந்திர அணியில் ஜப்பான் இருந்தால் தான் இந்நிலைமை இருக்கும். அமெரிக்காவின் அணு ஆயுத பாதுகாப்புக் குழுவின் கீழ் இப்பிராந்தியம் இருக்கவேண்டும்.

இப்படி திரு லீ சொன்னார். (எ)

## ராஜினாமா

புதுடில்லி, மே 23

ஹரியானா மாநில முதலமைச்சர் ஓம்பிரகாஷ் சௌதாலா தனது பதவியை ராஜினாமாச் செய்து விட்டார்.

## புஷ்ஷின் ஆசை!

வாஷிங்டன், மே 23

பலஸ்தீனப் பிரச்சினைக்கு சமாதானத்தீர்வை ஏற்படுத்தக் கூடிய அரசாங்கமே இஸ்ரவேலில் ஏற்படவேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் முன்கண்டவாறு தெரிவித்தார். (எ)

# இணைந்த யேமன் குடியரசின் முதல் ஜனாதிபதி அலிஅப்துல்லா

ஏடன், மே 23

வடயேமன் ஜனாதிபதி அலி அப்துல்லா கஸாலி இணைந்த யேமன் குடியரசின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்,

இரண்டு ஆண்டுகளின் பின்னர் முறையான நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும். அதுவரை இணைந்த யேமனின் நிர்வாகத்தைக் கவனிக்க ஜனாதிபதி ஆலோசனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தென்யேமன், வடயேமன் ஆகியன இணைந்ததனால் உருவான யேமன் நாடு இனி யேமன் குடியரசு என்று அழைக்கப்படும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஐக்கிய ஜேர்மனி; பிராவ்தா கருத்து!

மாஸ்கோ, மே 23

இரண்டு ஜெர்மனிகளும் ஒன்றிணைவது பற்றி பிராவ்தா எழுதியிருக்கிறது. ஒன்றுபட்ட ஜெர்மனி நேட்டோ கூட்டணியில் இடம் பெறுமானால் அது சோவியத் யூனியனுக்கு அரசியல் ரீதியில் ஒரு மிகப்பெரிய பின்னடைவாக இருக்கும் என்று பிராவ்தா எழுதியிருக்கிறது. (எ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண. லோங் முத்திரை வெளியீடு இலங்கை அரசுக்கே கௌரவம்

## நாவலர் கலாசார மண்டப வைபவத்தில் உரை

குருநகர், மே 24

"இலங்கை அரசு வண பிதா- லோங் அடிகளாருக்கு முத்திரை வெளியிட்டு தன்னைக் கௌரவித்துக்கொண்டிருக்கிறது" நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற வண- லோங் - அடிகளாரின் முத்திரை வெளியீட்டு வைபவத்துக்கு தலைமைவகித்துப் பேசிய யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. வி. பி. பாலசிங்கம் மேலும் பேசுகையில் :"இன, மொழி, பிரதேச எல்லைகளுக்கு அப்பாற்பட்டு மக்களுக்காக உழைப்பவர்கள் மகான்களாகின்றனர். அயர்லாந்து தேசத்தில் பிறந்த அடிகளார் யாழ்ப்பாணத்தில் சேவையாற்றிய காலங்களில் நமது தமிழ்மக்களின் வாழ்க்கை முறையை நேசித்ததால் தானும் ஒரு தமிழ் மகன் என்று சொல்வதில் பெருமைப்பட்டுக்கொண்டார்".

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

யாழ். அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் பேசுகையில்: நாங்கள் இப்பொழுது எதிர் நோக்கும் நெருக்கடி காலம் போன்று லோங் அடிகளார் காலத்தில் இருக்கவில்லை. இப்பொழுதும் அவர் வாழ்ந்திருந்தால் அதற்கான வழிவகைகளை செய்திருப்பார்" என்றார்.

பேராசிரியர் நேசையா சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண - பிரான்ஸிஸ் யோசெப் அடிகள், திருமதி பரராசசிங்கம் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

லோங்- அடிகள் நினைவுப் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற செல்வி கமிலா சூசைப்பிள்ளையின் பரிசுப் பேச்சும் இடம்பெற்றது.

பேச்சுப்போட்டியில் பரிசில் பெற்றவர்களுக்கு திருமதி யூலியற் அன்ரன் அல்பிரட் பரிசில்கள் வழங்கினார்.

திரு. எஸ் சகாதேவன் நன்றி கூறினார். (இ-51)

# நுவரெலியா விதை கிழங்கை வாங்காதீர் என கோரிக்கை

கொழும்பு, மே 24

நுவரெலியா மாவட்டத்தில் இருந்து விதை உருளைக் கிழங்கை வாங்கக் கூடாது என்று விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாண சபையின் விவசாய அமைச்சர் முனிரத்தின அத்தநாயக்கா இந்த வேண்டுகோளை முதலமைச்சரின் அலுவலகத்தில் நடந்த மாநாட்டில் விடுத்தார்.

உருளைக் கிழங்கை 'றெ:மற் றொட்' நோய் பிடித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கு மூலம் இந்த நோய் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டது'

உள்ளூரில் விதை உருளைக் கிழங்கு உற்பத்தி செய்யும் தருணம் வந்து விட்டது— என்றும் மாகாண அமைச்சர் சொன்னார். (அ-எ)

## ஹமீத் --

றது.

28 ஆம் திகதிய சந்திப்பின் போதும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மகேந்திரராஜா (மாத்தயா), அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், யோகரத்தினம் யோகி ஆகியோரே விடுதலைப் புலிகள் சார்பில் கலந்து கொள்வார்கள். [இ-9]

## பிரிட்டிஷ்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றை துறைமுகத்தில் இருந்து அகற்றியாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பை யாழ். போதனா வைத்தியசாலையுடன் இணைந்துசுகாதாரத்திணைக் களம் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான மாநாடு நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபரால் கூட்டப்பட்டது. (இ-10)

## திவ்வியநாதனை - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பும் புதிதாக உருவாக்கப் பட்டுள்ளது.

பிராந்திய ரீதியில் நிர்வாகக்குழுக்களை தெரிவு செய்து தேசிய மாநாடு ஒன்றில் புதிய நிர்வாகிகள் தெரிந்து எடுக்கப் படும்வரை இயக்கத்தின் புதிய நிர்வாகப் பொறுப்புகளுக்கு பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

தலைவர்: அ. செல்வம், உப தலைவர்கள் இ. இளங்கோ, சி. குகன் செயலதிபர்: கோ. கருணாகரம் [ஜனா] எம். பி., உப செயலதிபர்கள் கே. மித்திரன் என். சொக்கன், நிர்வாகச் செயலாளர்: ஜே. கிறிஸ்ரி. பொருளாளர் எம் கே. சிவாஜிலிங்கம். துணைப் பொருளாளர்: சு. வினோ. [இ-7]

# சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 18 00-20.00 | ரூ. 18.00-21.00 | ரூ. 22.00-24.00 |
| வாழைக்காய் | ரூ. 8.00-10 00 | ரூ. 6.00- 8.00 | ரூ. 8.00-10.00 |
| பயிற்றங்காய் | ரூ. 12 00-14.00 | ரூ. 16.00-17.00 | ரூ. 18.00-20.00 |
| பாகற்காய் | ரூ. 28.00-30 00 | ரூ. 12.00-14 00 | ரூ. 22.00-24.00 |
| கோவா | ரூ. 12.00-14.00 | ரூ. 8 00-14 00 | ரூ. 18.00-20.00 |
| லீக்ஸ் | ரூ. 20.00-21 00 | ரூ. 22.00-24.00 | ரூ. 23.00-24.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 18.00-20.00 | ரூ. 19.00-22.00 | ரூ. 22 00-24 00 |
| பீற்றூட் | ரூ. 8.00-10.00 | ரூ. 7.00-10.00 | ரூ. 15.00-16.00 |
| பீன்ஸ் | ரூ. — | ரூ. 20 00-22.00 | ரூ. 20.00-24 00 |
| பூசணி | ரூ. 5.00- 6 00 | ரூ. 3 00- 4.50 | ரூ. 7.00- 8.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 16.00-18.00 | ரூ. 12.00-14.00 | ரூ. 22 00-24.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 50.00-55.00 | ரூ. 45.00-52.00 | ரூ. — |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 40.00-45 00 | ரூ. 28 00-40.60 | ரூ. 55.00-56.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 32.00-34.00 | ரூ. 29 00-31.00 | ரூ. 30.00-32.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 10 00-12 00 | ரூ. 10.00-12.00 | ரூ. 10.00-12.00 |
| வெண்டைக்காய் | ரூ. 14.00-16.00 | ரூ. 16.00-18 00 | ரூ. 22.00-24.00 |

# நாடாளுமன்றம் செல்லாமலேயே பதவி துறப்பு

மட்டக்களப்பு, மே 24

மட்டக்களப்புமாவட்டநாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பொ. சுகுமார் (சுயேச்சை-1) மன்றம் செல்லாமலேயே தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

கே. வரதராஜன் பதவி விலகல் காரணமாக சுயேச்சைக்குழு-1 இன் பெயர் பட்டியலில் அடுத்து இடம் பெற்றிருந்த திரு. பொ. சுகுமார் நாடாளமன்ற உறுப்பினராக தேர்தல் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டார்.

தனது இராஜினாமாக் கடிதத்தை ஏற்கனவே தான் சமர்ப்பித்துவிட்டதாக திரு. பொ. சுகுமார் கூறினார். (இ-ரி)

# புத்தகக் கண்காட்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 24

"அமெரிக்க உயர் கல்வித் துறையில் நிகழும் மாற்றங்கள்" சம்பந்தமாக புத்தகக் கண்காட்சி நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் ஆரம்பமனாது.

அமெரிக்க தகவல் சேவைப் பிரிவு, யாழ். பொது நூல் நிலையத்துடன் இணைந்து நடத்தும் பிரஸ்தாப புத்தகக் கண்காட்சியை அமெரிக்க தகவல் சேவைப் பிரிவின் பொறுப்பதிகாரி திரு. கினத் தொன் றொவ் ஆரம்பித்து வைத்தார். வைபவத்துக்கு யாழ் பல்கலைக் ழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தலைமை வகித்தார்.

அமெரிக்க உயர் கல்வி முறை சம்பந்தமான பல நூல்களைக் கொண்ட கண்காட்சி எதிர்வரும் சனிக்கிழமை வரை நடைபெறும். பொதுமக்கள் இலவசமாக புத்தகக் கண்காட்சியைப் பார்வையிடலாம். (அ)

# பளை சாரணர் அணியின் செய்தி ஜனாதிபதியிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 24

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை மகாவித்தியாலயத்தைச்சேர்ந்த 10பேர்கொண்ட சாரணர் அணி தேசிய வீரர் தினமான செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியிடம் சமாதான செய்திகளைக் கையளித்தது.

இக் குழுவினர் முதலில் கடந்த மாதம் 9 ஆம் திகதி பளை மகாவித்தியாலயத்தில் இருந்து குழுத் தலைவர் திரு. மா. புவனேந்திரன் தலைமையில் சமாதான செய்திகளுடன் தமது பிரயாணத்தை ஆரம்பித்தனர். மூன்றாவது நாளான 11 ஆம் திகதி சிலாபத்துக்கு அருகில் மரவல என்னுமிடத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் இக் குழுவில் ஒருவரான ஜனாதிபதி விருதுபெற்ற சாரணர் நா. நற்குணம் மரணமானார். இதனைத் தொடர்ந்து இக் குழுவினர் தமது பிரயாணத்தை இடை நிறுத்தியிருந்தனர்.

மீண்டும் இப்பயணம் இம் மாதம் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 00 மணிக்கு, முன்பு விபத்து நடந்த இடத்திலிருந்து, மறைந்த சாரணர் நற்குணத்துக்கு 2 நிமிட அஞ்சலி செலுத்திய பின் கால் நடையாக ஆரம்பமானது. இக்குழுவினர் மூன்றாம் நாளான 19 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொழும்பை அடைந்தனர்.

யாழ்ப்பாணத்திலும் மற்றும் பயண வழிகளிலும் சேகரித்து வந்த சமாதான செய்திகளை தேசிய வீரர் தினமான 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இவர்கள் ஜனாதிபதியிடம் கையளித்தார்கள்.

இக் குழுவில் தலைவர் மா. புவனேந்திரன், சாரண ஆசிரியர் திரு. க சுந்தரலிங்கம், ஜனாதிபதி விருதுபெற்ற சாரணர்களான சி. விக்னேஸ்வரன், பூ. பவளானந்தன், மற்றும் சாரணர்களான க. விக்னேஸ்வரன், பு. காண்டீபன், மு. சித்திரவேல், சு. ரவீந்திரன், கு. கருணா, க. நந்தகுமார் ஆகியோர் இடம்பெற்றனர். (இ 7)

# கல்முனையில் தமிழ் தின விழா

அம்பாறை, மே 24

கல்முனை கோட்டப்பிரிவில் இம்முறை தமிழ் தின விழாவை சிறப்பாக நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 24 ஆம் திகதி (24. 5. 90) கல்முனை கார்மேல் பாத்திமாக்கல்லூரியில் விழா நடைபெறும்.

கல்முனை உதவிக்கல்விப் பணிப்பாளர்ஜனாப். ஐ.எம், இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற விருக்கும் இந்த விழாவில், கல்முனை கோட்டத்தின் கீழுள்ள ஒன்பது கொத்தணிகளையும் சேர்ந்த எண்பது பாடசாலை மாணவர்களின் போட்டி நிகழ்ச்சிகள் இடம் பெறும்.(எ-14)

# இந்திய புலமைப் பரிசிலும் இனவிகிதாசார அடிப்படையில்

இந்தியா வழங்கியிருக்கும் உயர்கல்வி பெறுவதற்கான 500 புலமைப்பரிசில்கள் பெறுபவர்கள் இனவிகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வித் துணை அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் தெரிவித்தார். (இ-எ)

# 50 சதவீத நகையே மீளளிப்பு

யாழ்ப்பாணம், மே 24

வடபகுதி மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகளில் 50 சத வீதமானவையே இது வரை மீளளிக்கப்பட்டு உள்ளன.

அடகு வைக்கப்பட்ட நகைப்பொதிகளின் எண்ணிக்கை 75 ஆயிரம் ஆகும். இதில் 37 ஆயிரத்து 915 நகைப் பொதிகளே மீளளிக்கப்பட்டன.

மிகுதி நகைகள் வாடிக்கையாளர்கள் பணம்கட்டுவதைப் பொறுத்து படிப்படியாக வழங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

இதே வேளை முன்னர் அடகு நகையை மீளப்பெற தயங்கிய மக்கள், 15 வீத வட்டிச் சலுகை வழங்கப்படுவதை அடுத்து அதிக அளவில் பணம் கட்டி வருவதாகவும் வேறு பலர் அடகு நகை மீளளிப்புக்காக மக்கள் வங்கியால் வழங்கப்பட்டு வரும் கடன் சலுகையை பயன் படுத்தி அடகு நகைகளை மீளப் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-உ)

# ஆலயங்களில் பிரமுகர்களுக்கு வரவேற்பளிக்கத் தடை!

## தமிழக முதல்வர் விதித்தார்

சென்னை, மே 24

தமிழ்நாட்டில் ஆலயங்களில், பிரமுகர்களுக்கு பூரண கும்பம், பரிவட்டம் ஆகியவற்றுடன் வரவேற்பளிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடவுளுக்கு முன்னர் யாவரும் சமம். ஆகவே பிரபலஸ்தர்களுக்கு ஆலயங்களில் இப்படி வரவேற்பளிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்என்று முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கண்டிப்பாக உத்தரவிட்டார்.

தமிழ் நாடு மாநில அரசு வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. [அ-எ]

# இந்திய தூதரகத்தை மூட உத்தரவு

புதுடில்லி, மே 24

பிஜீத்தீவில் உள்ள இந்தியத் தூதரகம் 24 மணிநேரத்தில் அகற்றப்பட வேண்டும் எனவும் அங்கு பணியாற்றிய இந்திய அதிகாரிகள் யாவரும் 14 நாட்களில் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் எனவும்நேற்றுக்காலை பிஜி அரசு உத்தரவு பிறப்பித்தது.

இவ்வெளியேற்ற உத்தரவு துரதிஷ்டமானது எனவும் தமக்கு அதிர்ச்சி தருவதாக அமைந்தது எனவும் பிஜி தலைநகர் சுவாவில் இந்தியத் தூதர் திரு. வி.பி. போனே தெரிவித்தார்.

# திறந்த பல்கலைக் கழகம்

கொழும்பு, மே 24

திறந்த பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிப்பதற்கு தொழில் புரியும் பலர் விண்ணப்பித்துள்ளனர்.

இத்தகவல் பல்கலைக் கழகச் செய்திக் குறிப்பு ஒன்றில் வெளியிடப்பட்டு உள்ளது (இ - எ)

## உணவு - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர் கல்வி அமைச்சில் நடைபெறும்.

இம் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு சகல அரசாங்க அதிபர்களும், மாகாண கல்விப் பணிப்பாளர்களும் கோரப்பட்டுள்ளனர். [இ - 10]

# ராஜீவ் வீட்டில் காவலுக்கு நின்றவர்

புதுடில்லி, மே 24

புதுடில்லியில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் வீட்டில் காவலுக்கு நின்ற மத்திய ரிசர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் குண்டு பாய்ந்து இறந்தார்.

அவர் வைத்திருந்த துப்பாக்கி தவறுதலாக வெடித்ததால் இச்சம்பவம் இடம் பெற்றது என்று கூறப்படுகிறது. [இ-எ]

# புலிகள் பற்றிய....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றார்கள். மட்டக்களப்பிலும் புலிகள் பொலீஸாரைக் கடத்தித் தாக்கியும் இருக்கிறார்கள்.

இந்தச் சம்பவங்களை அரசு மறைக்கப்பார்க்கிறது. இதன் மூலம் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில்ஒப்பந்தம் ஒன்று உள்ளது என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

இதே குற்றத்தை தெற்கில் எவரும் செய்திருந்தால் பிணையில் விடமுடியாத குற்றமாகக் கருதப்படும். அதனைச் செய்தவர்கள் இரவோடு இரவாக ரயர் போட்டு எரிக்கப்பட்டிருப்பார்கள்.

கல்முனை, மட்டக்களப்புச் சம்பவங்கள் குறித்து அரசு என்ன செய்கிறது என்று அரசு விளக்கம் தரவேண்டும்- என்று கேட்டார்.

அவ்வேளை, அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னா எழுந்து-

விடுதலைப் புலிகள் சம்பந்தமாக எந்தக் கேள்விக்கும் இங்கு பதிலளிக்கமாட்டேன் என்று ஏற்கனவே கூறியிருக்கிறேன். இந்தக் கேள்விக்கும் பதில் அளிக்க முடியாது- என்று கூறியவாறு மேசையில் இருந்த தமது கோவையை கையில் எடுத்துக்கொண்டு சபையை விட்டு வெளியே சென்றார்.

அமைச்சர் சபையைவிட்டுச் செல்கையில், எதிர்க்கட்சி எம். பிக்கள் பலரும் 'வெட்கம், வெட்கம்' என்று சத்தம் போட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இங்கேமதிப்பில்லை- வெட்கம் கெட்டவர் வெளியே போகிறார்-

முதுகெலும்பு இல்லாதவர் வெளியேப்ப கிறார்-

கோழை வளியேறுகிறார்-

நாடாளுமன்றத்தைக் கேலிக்கூத்தாக்கிவிட்டு, பதிலளிக்காமல் அமைச்சர் போகிறார் - என்று பலரும் கத்தினார்கள்.

திரு. நிமால் சிறிபால டி சில்வாவும், அமைச்சர் சபையைக் கேலிக்கூத்தாக்கிறார் என்று குறிப்பிட்டார்.

இந்தக் கட்டத்தில் சபாநாயகர் -

அமைச்சரிடம் பதில் தருமாறு உறுப்பினர்கள் கேட்கலாம். அப்படி அவர் பதில் தர விரும்பவில்லை என்றால் அவரைவற்புறுத்த முடியாது. அமைச்சரைப் பதிலளிக்கச் செய்ய முயற்சிக்கிறேன் என்று தெரிவித்தார்.

அமைச்சரது முடிவில் தான் திருப்தி அடையவில்லை என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

அப்போது முஸ்லிம் சமய அலுவல்கள் துணை அமைச்சர் அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் எழுந்து, எதிர்க்கட்சியினருக்குத்தான் முதுகெலும்பு இல்லை என்று தெரிவித்தார்.

சபாநாயகர்:-

குறுக்கீடு செய்ய வேண்டாம். இல்லையெனில் அங்கத்தவர் வந்து எனது ஆசனத்தில் இருக்கட்டும் -

ஒத்திவைப்புவேளையில் கேள்வி கேட்கும் உரிமை உறுப்பினர்களுக்கு உண்டு. அந்தக்கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் கொடுக்காமல் இருந்தால் [illegible] இயங்கியும் பயனில்லை - என்றார். [illegible]

கற்புலத்து

## மனோன்மணி அம்பாள் ஆலயம்

நந்தாவில், கொக்குவில்

மேற்படி ஆலயம் சம்பந்தமாக நேற்றைய [23 - 05 - 1990] உதயனில் வெளிவந்த விளம்பரத்தில்-

★ மடப்பள்ளி, கட்டிடப் பூச்சு வேலைகள், நில வேலைகள் போன்றவை பூர்த்தி செய்தல்,

★ அம்பாள் ஸ்தூபி, ஸ்ரீதளம், என்பன ஓர் அடியாரின் நிதியுதவியுடன் கட்டி அமைத்தல்,

★ புதிய வசந்த மண்டபம் ஓர் அடியாரின் நிதியுதவியுடன் கட்டியமைத்தல்,

★ மணி மண்டப வேலைகள் ஒப்பேற்றுதல்,

★ புதிய சண்டேஸ்வரி ஆலயம் ஒன்றை ஓர் அடியாரின் நிதியுதவியுடன் ஸ்தாபித்தல் ஆகியன நடந்து கொண்டிருக்கின்றன என்று இருந்திருக்க வேண்டும்.

ஆனால் அவ்வேலைகள் நடந்து முடிந்துள்ளன என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது.

இதனை அம்பாள் அடியார்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நந்தாவில் மனோன்மணி அம்பாள்
ஆலய தர்மகர்த்தா, பரிபாலன சபை.

(C/4533)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

மகாத்மா காந்தி வீதியில் மதகு அமைப்பு வேலைக்கான கேள்வி அறிவித்தல்

மேற்குறிப்பிட்ட வேலைக்கான முன்னைய கேள்வி அறிவித்தல் திகதி பின்போடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமரத்துப் பொறியியலாளரிடமிருந்து 1990ஆம் ஆண்டு ஆனி மாதம் 6 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 00மணி வரை கேள்விப் பிணைப்பணம், கேள்விப் படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் 1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமரத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வி. பி. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
23 - 05 - 1990 (சி-4568)

## ஆண் உதவித் தாதியர் பயிற்சி நெறி

Training For Nurses Aide (Male)

ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சி நெறி

10 - 06 - 1990 இல் ஆரம்பமாகவுள்ளன.

பதிவுகட்கு:-
Dr. V. P. சுந்தரராஜன்,

சாயி மெடிக்கல் அக்கடமி

இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி.4566)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

அறிலொர் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு.

**பொருள்:**

அமைதியாய் இருந்ததால் எல்லாரும் அறியவில்லை என்று கருதி என்னுடைய காமம் தெருவில் பரவி மயங்கிச் சுழல்கின்றது.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

24 - 05 - 1990 த. பெ இலக்கம் 25

# அடிகளார் சேவை ஒலிக்கட்டும்

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தேசிய வீரர்கள் தினத்தன்று 47 பிரமுகர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. நான்கு பெரியார்களைக் கௌரவித்து நினைவு முத்திரைகள் வெளியிடப்பட்டன.

இந்த 51 பேர்களிலும் ஐம்பது பேரும் இந்த நாட்டில் பிறந்து வளர்ந்து வெவ்வேறு துறைகளிலும் தொண்டாற்றியவர்கள். ஒருவர் இருவர் வெளிநாடுகளில் பிறந்தவர்களாயிருப்பினும், இந்நாட்டுப் பிரஜைகளாகி வாழ்பவர்கள். ஆனால் ஐம்பத்தோராவது ஆளான வண. பிதா லோங் அடிகளார் வெளிநாட்டிலிருந்து வந்து இங்கு சிறப்பான சேவையாற்றி மீண்டும் தமது தாயகம் திரும்பியவர்.

பதினெட்டு வருடங்கள் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் கல்விச் சேவையாற்றியவர் லோங் அடிகளார். யாழ்ப்பாணத்தில் ஒரு கிறிஸ்தவ கல்லூரியில் பணிபுரிந்த அவர் இந்துக்கள், பௌத்தர்கள் என்று பிறசமயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் கல்வி ஒளி ஏற்றினார்.

இலங்கையின் பல பாகங்களிலும் அவருக்குச் சீடர்கள் இருந்தனர் என்று கூறுமளவுக்கு அவரது சேவை நாடு முழுவதற்கும் வியாபித்திருந்தது. அவரது கல்வி நிர்வாகத் திறமைகளால் புகழ்பரப்பிய சம்பத்தரிசியார் கல்லூரியில் படிப்பதற்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் வந்தார்கள் என்பது அதன் அர்த்தம்.

தனது கல்வித் திறமையால் மட்டுமன்றி, கண்டிப்பாலும், மாணவர்களிடையே ஒழுக்கமும், கட்டுப்பாடு என்பனவற்றைப் பேணியதாலும், அவர் தலைமை வகித்த கல்லூரியின் தரத்தையும், புகழையும் உயர்த்தினார் அதனால் அவரது சேவை இலங்கை முழுவதற்கும் கிடைத்ததற்குச் சமனாகியது. ஆகவே அவர் நாடளாவிய ரீதியில் ஒரு தேசிய வீரராகக் கருதப்படவேண்டியவர் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

எனினும் அவர் தமது புக்ககமான யாழ்ப்பாணத்துக்குச் செய்த சேவைகளுக்கு அப்பகுதி மக்கள் என்றென்றும் நன்றியும் கடமைப்பாடும் உடையவர்கள்.

லோங் அடிகள் செய்த சேவையை, நன்றியை யாழ்ப்பாணத்து மக்கள் மறக்கவில்லை என்பது கடந்த செவ்வாய்க்கிழமை துலாம்பரமாயிற்று அரை மணி நேரத்தில் அடிகளாரின் நினைவு முத்திரைகள் ஆறாயிரம் விற்பனையாகின என்றால் அது வேறு எதனை எடுத்தியம்புகிறது.

கல்வித்துறையில் மட்டுமன்றி விளையாட்டு, மற்றும் மக்கள் பணிகளிலும் அவர் சொந்த மண்ணின் மைந்தன் போலவே, தனது ஆளுமையையும், ஆற்றலையும் முழுக்கச் செறித்து சேவை புரிந்தார். ஆசியாவின் மிகச் சிறந்த பொதுசன நூல்நிலையங்களில் ஒன்றாக விளங்கிய யாழ். பொது நூலகத்தை உருவாக்குவதில் அவர் முன்னின்று உழைத்தவர். பலாலி விமான தளத்தை சிவில் விமான நிலையமாக்குவதற்கு அரும்பாடுபட்டவர். அவை மட்டுமன்றி குடாநாட்டின் கைத்தொழில் விவசாய வளர்ச்சிக்கும் அக்காலத்தில் பாடுபட்டிருக்கிறார்.

பிறந்த மண்ணுக்குச் செய்வது போன்று தாம் புகுந்த மண்ணுக்கும் பரிபூரண தொண்டு புரிந்தவர் அடிகளார். அங்கென்ன இங்கென்ன எங்கென்றாலும் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற கோட்பாட்டை உள்ளத்தில் உயர்த்திப் பிடித்து பிரதிபலன் எதிர்பாராது, மனம் ஒன்றிச் சேவையாற்றிய பெருந்தகை அவர். தனது பெயருக்கு ஏற்பவே மிக உயர்ந்த மனிதன் லோங் அடிகள்.

அவர் யாழ்ப்பாணத்துக்கு, ஈழத்துக்குத் தொண்டாற்றியவர் என்பதை விட இப்பகுதி மக்களுக்கு ஒரு படிப்பினையாக இருந்தவர், பாடம் புகட்டிச் சென்றவர் என்பதே மிகப் பொருத்தம் என்று நாம் கருதுகிறோம்.

தமது சொந்த மண்ணைப் பற்றி, அந்த மண்ணில் வாழும் மக்கள் நலனைப்பற்றி கிஞ்சித்தும் அக்கறை கொள்ளாமல் தமது சுயநலத்தை நாடி வெளிநாடு ஓடும் எம்மவர்கள் அவரிடம் இருந்து பெரிய பாடம் படிக்க வேண்டியவர்கள்.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானிலும் நனிசிறந்தன என்பதைப் புரியாத எங்கள் பேதையரைப் பார்த்து லோங் அடிகளாரின் ஒப்பற்ற சேவை கேலி செய்கின்றது! கிண்டல் புரிகிறது!! அதனை அவரது நினைவு தினம் வருடாந்தம் காதில் சங்காக ஒலித்து ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கட்டும்!!!

## லயன்ஸ் கழக சர்வதேச பட்டயம் அளிக்கும் விழா

யாழ்ப்பாணம் மே 24

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் சர்வதேச அங்கீகாரப் பட்டயம் அளிக்கும் விழா அண்மையில் யாழ்ப்பாணம் அசோக் ஹோட்டலில் நடைபெற்றது.

விழாவில் பிரதம விருந்தினர்களாக லயன்ஸ் மாவட்ட ஆளுநர் லயன் பிரேமச்சந்திரா பத்திரானவும் அவரது பாரியார் மானில் பத்திரானவும் கலந்து கொண்டனர். கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டும் பாரியாரும் கலந்து கொண்டனர்.

விழாவில் ஆரம்பத்தில் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மாணவியரின் சிறப்பு பரத நாட்டிய நிகழ்ச்சி இடம் பெற்றது. யாழ்ப்பாணம் என். வீரமணி ஐயரினால் இயற்றப்பட்டு இசையமைக்கப்பட்ட கழகக் கீதத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பித்து நடைபெற்றன.

ஆரம்ப நிகழ்ச்சிகளுக்கு வழிகாட்டுதல் குழுவின் தலைவர் லயன் ஆர். கே. குலசேகரன் (யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர்) தலைமையேற்றார். தொடர்ந்து நிகழ்ச்சிகள் சுன்னாகம் லயன்ஸ் கழக தலைவர் திரு. எஸ். வி. சிவஞானம் தலைமையில் நடைபெற்றன.

விழாவில் சிறப்பு மலரை மலர்க்குழுத் தலைவர் லயன் ஆர். கே. குலசேகரம் வெளியிட்டு உரையாற்றினார்.

நன்றியுரை இரண்டாவது பிரதித் தலைவர் லயன் ஆர். பேரின்பநாயகத்தால் நிகழ்த்தப்பட்டது. (க)

### பிராந்திய கல்லூரிகளில்---

கொழும்பு, மே 24

பட்டப்பின்பட்டம் பெற்ற தொழில் வல்லுநர்கள் உத்தேச பிராந்தியக் கல்லூரிகளில் போதிப்பதற்காக தெரிவு செய்யப்படுவர்.

பல்கலைக் கழகங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையைக் கருத்தில் கொண்டே கல்வி சம்பந்தமான நடவடிக்கைக் குழு அந்தத்தீர்மானத்தை எடுத்திருக்கிறது. (எ)

அதிபர் தரம்- 1,2,3,

# விகிதாசார அடிப்படையிலேயே வெற்றிடங்கள்யாவும் நிரப்பப்படும்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு கல்வி துணை அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், மே. 24

அதிபர் சேவை தரம் 1 தரம் 2, அதிபர் தரம் 3 இல் உள்ள வெற்றிடங்கள் யாவும் கணக்கெடுக்கப்பட்டு அவை விகிதாசார அடிப்படையில் நிரப்பப்படும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவத்துக்கு அனுப்பிய கடிதத்தில் கல்வி துணை அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதிபர் தரம் 1-போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களிலிருந்து நூற்றுக்கு மேலான தமிழரும், முஸ்லிம்களும் கடந்த 19ஆம், 20ஆம் திகதியில் கல்விச்சேவை ஆணைக்குழு அலுவலகத்துக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அதிபர் தரம் 2 க்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறுகின்றன.

இந்த இரு தரங்களுக்கான நேர்முகப்பரீட்சை முடிவுகள் ஜூன் மாத இறுதிக்குள் வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து ஜூலை மாதத்தில் புதிய நியமனங்கள் இடம்பெறும்.

அதிபர் தரம் - 1, அதிபர் தரம்-2க்கு நியமனம் வழங்கப்படும் போது 40 சத வீதமான வெற்றிடங்கள் அதிபர் தரம்-2, அதிபர் தரம் - 3 ஆகியவற்றில் உள்ள சிரேஷ்ட அதிபர்களைக் கொண்டு தரப்படும்.

அதிபர் தரம் 3 பதவி வெற்றிடங்களில் 60 சத வீதமானவை போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களிடமிருந்து நிரப்பப்படும். இதற்கான நேர்முகப்பரீட்சை ஜூலை மாதத்தில் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து பதில் அதிபர்களை பாடசாலையின் தரத்திற்கு ஏற்ப நிரந்தரமாக்கும் நடவடிக்கைகள் ஆகஸ்ட் மாதத்தில் மேற்கொள்ளப்படும்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் சகல ஆட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி உள்ள செய்தியில் மேற்கண்ட விபரங்களைத் தெரிவித்துள்ளார். [இ]

அரச ஊழியருக்கு எதிரான

# விசாரணைகளை உடனே நடத்தி முடிக்க உத்தரவு

கொழும்பு' மே 24

அரசு ஊழியருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள சிறிய குற்றங்கள் மீதான திணைக்கள ஒழுங்காற்று விசாரணைகளை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் முடித்து விட வேண்டும் என்று அரச கூட்டுச் சேவைப் பணிப்பாளருக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

விசாரணைகள் முடிந்தவுடன் தேவையானால் எடுக்கப்பட வேண்டிய ஒழுங்கு நடவடிக்கைகளையும் இக்காலத்திற்குள் எடுக்கும்படியும் அமைச்சர் பெஸ்டஸ் பெரெரா, கூட்டுச்சேவைகள் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பெரிய குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இப்படி அமைச்சரின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் —

எழுதுவினைஞர் சேவையில் உள்ளவர்களுக்குத் திறமை அடிப்படையில் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பதவி உயர்வு வழங்குவது என கூட்டுச்சேவை பணியகம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. (உ-எ)

### தட்டச்சு இயந்திரம்

மண்டைதீவு, மே 24

மண்டைதீவு ஐக்கிய நாணய சங்கத்திற்கு புதிய தட்டச்சு இயந்திரம் ஒன்று அண்மையில் யாழ், மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரால் வழங்கப்பட்டது.

மண்டைதீவுப் பகுதியைச் சேர்ந்த இளம் யுவதிகள் தட்டெழுத்துப்பயிற்சிபெறுவதற்காக இத்தட்டச்சு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-88)

முறைசாராக் கல்வி:

## 15 பயிற்சி நெறிகளுக்கு மாணவர்கள் சேர்க்கப்படுவர்

யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினரால் பாடசாலைகளில் நடத்தப்பட்டு வரும் பதினைந்து பயிற்சி நெறிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளார்கள் என முறைசாராக் கல்வி அதிகாரி திரு. எஸ் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

பட்டுக்கரை அச்சிடுதல், தோற்பொருள் உற்பத்தி, கட்புலசாதன உற்பத்தி, புத்தகம் கட்டுதல், காகித உற்பத்தி, விவசாய விஞ்ஞானம் வானொலி பழுது பார்த்தல், மின் இணைப்பு, படகுவெளி இணைப்பு, இயந்திரங்கள் திருத்தல், உணவுப் பொருட்களை பேணல், பனம் பொருள் உற்பத்தி, வீட்டு மின் இணைப்பு, மோட்டார் திருத்துதல், மரத்தளபாட உற்பத்தி ஆகிய பயிற்சிநெறிகளுக்கே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் செய்பவர்கள் யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு திரு. எஸ். சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (க-90)

### பயிற்சிக் கருத்தரங்கு

மண்டைதீவு, மே 24

ஆசிரிய ஆலோசகர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் திருமலை சண்முகானந்த வித்தியாலத்தில் நடைபெற்றது.

சுமார் ஒருவாரம் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரிய ஆலோசகர்கள் கலந்துகொண்டார்கள்.

பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (க-88)

### சொற் பொழிவு

யாழ்ப்பாணம் மே 24

"படைப்பின் சீரிய நிலையும் சூழல் மாசடைதலும்" என்னும் தலைப்பிலான சொற் பொழிவு 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு 115, 4 ஆம் குறுக்குத் தெருவிலுள்ள நற்சமூக நடுநிலைய மண்டபத்தில் நடைபெறும்.

நிலைய இயக்குனர் கலாநிதி சி. யோ. இம்மானுவேல் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கலாநிதி. தர்மன் மார்க் சவிரிமுத்து, கலாநிதி ஐ. ஹென்றி விக்ரர் ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்து கொள்வார்கள்.

# பல நேரடித் தாக்குதல்களை துணிவுடன் எதிர்கொண்ட கில்மன்

## நினைவஞ்சலிக் கூட்டத்தில் பாப்பா

கைதடி மே 24

இந்திய ராணுவத்துடனான பல நேரடித் தாக்குதல்களை கில்மன் துணிவுடன் எதிர்கொண்டு போராடினார். திலீபனைத் தொடர்ந்து நீராகாரம் எதுவுமின்றி உண்ணாவிரதமிருக்கத் துணிந்த வீரன் கில்மன். இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்கள் எமக்கு ஆதரவளித்து எம்மைப் பலப்படுத்த வேண்டும். இல்லாவிடின் எம் மக்களின் எதிர்காலம் மிகவும் பரிதாபகரமாக இருக்கும்.

வீரவேங்கை கப்டன் கில்மனின் முதலாவது நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் பாப்பா இவ்வாறு தெரிவித்தார்.

மீசாலை சிற்றூரணவத் தலைவர் திரு. கனகரத்தினம் தலைமையில்மீசாலை பழைய புகையிரத நிலையத்திற்கு அருகாமையில், நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. பாப்பா மேலும் பேசுகையில், "இத்தனை இழப்புக்கள் மத்தியிலும் நாம் ஏன் இன்னும் போராடுகின்றோம் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். எமது இலட்சியம் இன்னும் வென்றெடுக்கப்படவில்லை. எமது இலட்சியம் வென்றெடுக்கப் படும் வரை நாம் போராடுவோம்" என்றார்.

சாவகச்சேரிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. கந்தன் தனதுரையில் "இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதை விட ஆதிக்கம் செலுத்துவதே சிங்கள அரசின்நோக்கம்" என்றார்.

சாவகச்சேரி மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி: அமுதினி பேசுகையில் "பெண் விடுதலை என்பது ஆண்களுக்கு எதிரானது என்று நினைக்கக் கூடாது. எப்பொழுது பெண்கள் பொருளாதார நிலைக்காக தம்மில் தங்கி நிற்கின்றார்களோ அப்பொழுது தான் பெண் விடுதலை என்பது சாத்தியமாகும். எமது போராட்டத்தில் பெண்களும் பெருமளவில் பங்கு கொள்ள வேண்டும்" என்றார்.

ஆசிரியர் பி. வி. இராஜரட்ணம் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி பூமலர் நடேசன் உட்படப் பலர் இங்கு உரையாற்றினார்கள்.

வீரமரணமடைந்த போராளிகளான கப்டன் கில்மன், மயூரன், கமல் ஆகியோரின் திருவுருவப்படங்கள் வீரமரணமடைந்த போராளிகளின் பெற்றோரால் திறந்து வைக்கப்பட்டன. (இ-7-74)

## கண்டதும் கேட்டதும்

மலையக மக்களின் உரிமைகளுக்கு ஆதரவாக கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற ஹர்த்தால் பூரண வெற்றி பெற்றது. நகரத்தில் மட்டும் அல்ல, கிராமங்களில் கூட ஒரு கடை தானும் திறக்கப்படவில்லை.

இத்தகைய ஹர்த்தாலால் ஒரு சில வசதியீனங்கள் இருந்தாலும் பக்க நன்மைகளும் உண்டு என்பதை அவதானிக்க முடிந்தது.

உதாரணத்துக்கு மது அருந்துவோரையும் புகைபிடிப்போரையும் எடுத்துப் பார்க்கலாம். மது சாலைகள், தவறணைகள் ஆகியன மூடப்பட்டன. பலருக்கு "தண்ணித் தாகத்"தைத் தணிக்க இடமே இருக்கவில்லை.

அதுபோலவே சிகரட் விற்பனையும் முற்றாக நிறுத்தப்பட்டது. "தீர்க்க தரிசனம்" உடைய சிலர் தான் ஒரு நாள் "ஸ்ரொக்கை முன்னதாகவே சேகரித்து வைத்திருந்தனர்.

இதற்கிடையில், மே 31 ஆம் திகதி உலக புகை பிடித்தல் நிறுத்தும் தினமாக அனுஷ்டிக்கப்பட இருக்கிறது.

மது அருந்துதலையும் புகை பிடித்தலையும் நிறுத்தவும் ஹர்த்தால் நினைவு உதவும் என்பது நம்பிக்கை, அவ்வாறு நடக்குமோ என்பதுதான் கேள்வி.

### சாயிபாபா அவதார பொன்விழா

மானிப்பாய், மே 24

ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அவதார பொன் விழா அக்டோபர் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை கொண்டாடப்பட உள்ளது.

இதனை யொட்டி ஸ்ரீ சத்திய சாயி பாபா இணைப்புக்குழுவின் யாழ்ப்பாணக் கிளையினர் பல நிகழ்ச்சிகளை நடத்த உள்ளனர்.

இரத்ததானம் வழங்கல், நாராயண சேவை (அன்னதானம்), பாலவிகாஷ் (குழந்தைகள் மன்றம்) கலை நிகழ்ச்சிகள், குழந்தைகள் பேரணிகள் ஊர்வலம், சிறுவர்களுக்கான எழுத்து, ஓவியம், சித்திரம், ஆக்கமுயற்சிகளுக்கானபோட்டிகள் ஆகிய பல நிகழ்ச்சிகளை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அவதார பொன் விழா சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க-90)

## செய்திக்கொத்து

### புனர் நிர்மாணம்

ஒட்டுசுட்டான் மே 24

தண்ணீரூற்று ஊற்றங்கை பிள்ளையார் ஆலயகேணியின் புனர்நிர்மாண வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (இ-113)

### கிராமசேவகர்

மண்டைதீவு, மே. 24

மண்டைதீவு கிராம சேவகர் பிரிவு தற்பொழுது மூன்றாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மத்தி தெற்கு என மூன்று பிரிவுகளிலும் ஒவ்வொரு கிராமசேவை அலுவலகர் கடமையாற்றுவார். (இ-88)

### பாராட்டுவிழா

கைதடி மே 24

சுரதாள சரவேக தவில் உலகமேதை கைதடி பழனி மலைக்கு ஜூன் மாதம் 23 ஆம் திகதி கைதடி இணுங்கித்தோட்ட முன்றலில் பாராட்டுவிழா எடுக்கப்பட இருக்கிறது. திரு. கே. பழனி மலைக்கு அன்றைய தினம் பெயன்னாடை போர்த்தி பொற்கிழியும் வழங்கப்படும்.

சர்வமத பீடாதிபதிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஈழத்துக்கலைஞர்கள், நீதியரசர்கள் உட்பட பல. வாழ்த்துரை வழங்குவார்கள்

இதற்கான சகல ஏற்பாடுகளையும் திரு. கே. வி.முத்துக்குமாரசுவாமி தலைமையிலான விழாக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர். (க-74)

### முருங்கை சீசன்

மண்டைதீவு, மே. 24

மண்டைதீவு பகுதியில் தற்பொழுது முருங்கைக்காய் சீசன் ஆரம்பித்துள்ளது. இதனால் வெளியூர் மரக்கறி வியாபாரிகள் இங்கு வந்து பெருந்தொகையான முருங்கைக்காய்களை கொள்வனவு செய்கின்றார்கள். (88)

### கொழும்பு முட்டை

யாழ்ப்பாணம் மே 24

கொழும்பில் விற்பனையாகாது தேங்கிக் கிடந்த முட்டைகளையாழ்ப்பாணத்துக்கு இறக்குமதி செய்து அவற்றை மலிவு விலையில் விற்பனை செய்கிறார்கள் சில வர்த்தகர்கள். ஆனால் இந்த முட்டைகளில் பெரும்பாலனவை கெட்டுப் போனவையாகவும் கூழ் முட்டையாகவும் உள்ளன என்று அறிய வருகின்றது. (க)

## வாசகர் திருமுகம்

### ஆட்பதிவு ஆணையாளர் அவதானத்துக்கு

கடந்த ஆண்டு மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பணிமனை திறக்கப்பட்டு இயங்கி வருகிறது.

இப் பணிமனை திறக்கப்பட்ட பின்னர் கிளிநொச்சிக்கு போகும் கஷ்டம் நீங்கியதென எண்ணி தேசிய அடையாள அட்டை ஒன்று பெறுவதற்காக G 794965 இலக்கம் உடைய விண்ணப்ப படிவத்தைப் பூரணப்படுத்தி தேவையான ஆவணங்களுடன் புளியம்பொக்கணை கிராம சேவையாளரின் சிபாரிசைப் பெற்று கண்டாவளை உதவி அரசாங்க அதிபரிடம் அதைநேரில் கையளித்தேன்.

அவர் நான் க. பொ. த. பரீட்சைக்கு தோற்ற வேண்டிய நிலையை விளக்கி எழுதி ஆட்பதிவு ஆணையாளருக்கு எனது விண்ணப்பத்தை அனுப்பினார்.

பல மாதங்களாகியும் எனது அடையாள அட்டை வரவில்லை. நான் அலுவலகத்துக்கு அலைந்து திரிந்தது தான் மிச்சம். எனது 18.1.90 ஆம் திகதிய பதிவுக் கடிதத்துக்கு ஆட்பதிவு ஆணையாளர்காரியாலயத்தில் இருந்து 1.2.90 திகதிய 02A/12/25 ஆம் இலக்கக் கடிதம் கிடைத்தது.

எனது தேசிய அடையாள அட்டை 28.1.89 இல் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது என அதில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றுவரை அடையாள அட்டை கிளிநொச்சி கண்டாவளை இதில் எந்தப் பணிமனைக்குமே வரவில்லை.

பின்தங்கிய பகுதி என்றா எங்களை இப்படி புறக்கணிக்கிறார்கள் ஆட்பதிவு ஆணையாளர் எமது நிலையைக் கவனத்தில் எடுப்பாரா?

வே சிவகுமார்,
கண்டாவளை.

### மாற்றாந்தாய் பிள்ளைகளா?

உள்ளூராட்சிச் சேவை ஊழியர்கள் மாற்றாந்தாய் பிள்ளைகளாக அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றார்கள்.

2 ஆண்டு சம்பள முற்பணம், 6 மாத இடர் நிவாரணக் கடன் போன்ற சலுகைகள் எம்மைப் பொறுத்த வரையில் ஏட்டுச் சுரைக்காய் தான்.

எமக்காகப் பேச யாரும் இல்லை. ஏனெனில் அப்படிப் பேச வேண்டியவர்கள் மத்திய அரசைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். அத்துடன் இந்தச் சலுகைகளை ஏற்கனவே பெற்றுவிட்டார்கள்.

அனாதைகளான எமக்கு அரசு உதவுமா?

ஆர். கண்ணன்.
வடமராட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spoken English
ஆங்கிலம் பேச வேண்டும் என்ற விருப்பம். ஆனால் தவறாகப் பேசிவிடுவோம் என்ற தயக்கம். இதுதானே உங்கள் பிரச்சினை. உளவியல் ரீதியில் 90 நாட்களில் ஆங்கிலம் பேசும் பயிற்சி.
விபரங்கட்கு:
BRIGHT TRAINING CENTRE
P. O. BOX. 162. COLOMBO,
SRI LANKA.

# உதயன்

24 - 05 - 1990 வியாழக்கிழமை

Method of Book-keeping
கடை கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்து தபால் மூலம் கற்றுத்தரப்படும். ஆறு மாத கால Diploma பயிற்சியாகும்.
விபரங்கட்கு:-
BRIGHT TRAINING CENTRE
P. O. BOX. 162, COLOMBO,
SRI LANKA.

### யாழ். ஆஸ்பத்திரி வீதி
## இலங்கை வங்கிக் கிளையில் சனியன்று கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி பிரதான கிளையில் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை மீளக் குடியமர்தலுக்கான உதவிப் பணம் ரூ. 1000 - ரூ. 2000 மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த நன்கொடைப்பணம் ரூ. 4000 கீழ்க்காணும் கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு வழங்கப்படும்.

**மீளக் குடியமர்தலுக்கான உதவிப்பணம் ரூபா.1,000/-**

கிராமசேவையாளர் பிரிவு கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, அத்தியடி, சுண்டிக்குளி, யாழ்பட்டினம், பெரிய கடை, கொட்டடி, நாவாந்துறை, சோனகதெரு, அரியாலை மேற்கு, நல்லூர் தெற்கு

**ரூபா. 2000/-**

ஈச்சமோட்டை, வண்ணை மேற்கு, திருநெல்வேலிமேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் மத்தி

**உற்பத்தி திறன் வாய்ந்த நன்கொடைப் பணம் ரூபா. 4, 000/-**

கொழும்புத்துறை, பெரிய கடை, கொட்டடி நாவாந்துறை, சோனகதெரு, பத்தமேனி, அச்சுவேலி வடக்கு, சிறுப்பிட்டி, உரும்பராய் மேற்கு, இருபாலை (இ)

## கிராமசேவையாளர் பிரச்சினை: புலிகள் கலந்துரையாடுவர்

யாழ் - மாவட்ட கிராமசேவையாளர்களின் செயலகப் பிரச்சினைகள் தொடர்பாகவும்-எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரும் உதவி அரசாங்க அதிபர்களும் நாளை வெள்ளிக்கிழமை கலந்துரையாடல் ஒன்றை நடத்த உள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு மனோகராத் தியேட்டரில் இக் கலந்துரையாடல் நடைபெறும்.

சகல கிராம சேவையாளர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-10)

## உலக வங்கி அதிகாரிகளும் அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்ட மாநாடு

யாழ்ப்பாணம், மே 24

புனர்வாழ்வு அமைச்சு ஆலோசகர்கள் உலக வங்கி சமூகசேவை ஆலோசகர் ஆகியோர் கலந்துகொண்ட மாநாடு ஒன்று நேற்று யாழ் செயலகத்தில் உள்ள அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

புனர்வாழ்வு அமைச்சைச் சேர்ந்த திரு. சிவானந்தன் திரு. தயாபரன் ஆகியோரும் உலக வங்கியிலிருந்து திரு. குனாட் என்பவரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் தலைமையில் மாநாடு நடைபெற்றது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அமைக்கப்பட்டு வரும் வீடமைப்புகள் பற்றி மாநாட்டில்ஆராயப்பட்டது

இந்த மாநாட்டுக்கு முன்னர் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைக்கப்பட்டுவரும் வீடுகளை இவர்கள் பார்வையிட்டனர்.

இன்று கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குச் சென்று அங்குள்ள வீடமைப்புகளை இவர்கள் பார்வையிடுவார்கள். (இ-10)

## மீன் தொட்டிக்குள் இறந்த சிறுவன்

கொழும்பு, மே 24

ஆறு அடி உயர மீன் தொட்டிக்குள் 3½ வயது ஆண் குழந்தை ஒன்று விழுந்து இறந்த பரிதாப சம்பவம் காலிப் பகுதியில் இடம் பெற்றது.

சம்பவம் நடைபெற்ற நேரம் மீன் தொட்டிக்குள் ஐந்து அடி தண்ணீர் இருந்தது.

சம்பவ தினம் மூத்த மகன் அலுவலாக வெளியே சென்றிருந்தார். இரண்டாவது மகனான இறந்தவரை நான் காணாது வீடு முழுவதும் தேடினேன். இறுதியில் மீன் தொட்டிக்குள் பிணமாக அவர் மிதக்கக் கண்டேன்''

இப்படி 33 வயது தாயான திருமதி வசந்தா காரியவாசம் மரண விசாரணையில் தெரிவித்தார். (இ-எ)

எமது இன்றைய புதிய வெளியீடு
பார்த்திபன் — அஸ்வினியின்
பொண்டாட்டி தேவை
வீடியோ விமல்,
117, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம். [13267]

## நன்றி நவிலல்

### கனம் B. C. D. மேதர்

கடந்த 13ம் திகதி, 36 (F)பிறேசர் அவெனியூ தெகிவளையில் வசித்த கனம் B C. D மேதர் அவர்களின் மறைவையொட்டி அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் 14ஆம் திகதி நடைபெற்ற இறுதிச் சடங்குகளில் கலந்து எமது துக்கத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

மேதர் குடும்பத்தினர்,

36, (F) பிறேசர் அவெனியூ,
தெகிவளை [3633]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பிரபாவின் பின்னால் நிற்பதே கடந்த கால தவறான நடவடிக்கைகளுக்கு சிறந்த மன்னிப்பு

### மாற்றுக் குழுக்களுக்கு காசி அழைப்பு

காங்கேசன்துறை, மே 24

''இன்று உலக அரங்கிலே மிகப்பெரும் தலைவராக கௌரவம் கொடுத்து பாராட்டப்படுவர் எமது தலைவர் பிரபாகரன், உலகப் பத்திரிகைகளும் வானொலிகளும் இவருக்கு பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கின்றன. இந்நிலையில் நமது மத்தியில் உள்ள ஏனைய குழுக்களையும் அவரின் பின்னால்நிற்குமாறு கேட்க விரும்புகிறேன். அந்நிய படையினரின் பின்னால் நின்றுநீங்கள் அடைந்த இலாபம் என்ன என்பதை சிந்தித்துப்பாருங்கள் தமிழினத்தின் தலைவர் பிரபாகரனின் பின்னால் நிற்பதே உங்களது கடந்த கால நடவடிக்கைகளுக்கு சிறந்த மன்னிப்பாகவும் அமையும்''

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் இடம் பெற்ற தியாகி கருணானந்த சிவம் நினைவு தினக்கூட்டத்தில் கலந்துரையாற்றிய கவிஞர் காசி ஆனந்தன்மேற் கண்டவாறு கூறினார்.

காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றத்தின் ஆதரவில் தியாகி கருணானந்த சிவம் கலை அரங்கில் இடம்பெற்ற இக்கூட்டத்துக்கு திரு. எஸ். வேலாயுதம் தலைமை வகித்தார்.

கவிஞர் காசி ஆனந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது.

தமிழரசுக்கட்சி, தமிழர் கூட்டணி காலங்களிலும் கூட தியாகி கருணானந்த சிவம் தீவிரவாத போக்கைக் கொண்டிருந்தார். என்றைக்குமே அவர் தீவிரவாதத்தின் பக்கமே இருந்தார். போராட்டத்தில் தொய்வு ஏற்படக் கூடாது என்பதில் அவதானமாகஇருந்து குரல் கொடுத்து வந்தார். எல்லோருக்கும் போல அவரும் இருக்காமல் ஏதோ ஒரு வழியில் இனப் போராட்டத்துக்கு உதவி வந்தார்.

மக்களைத் தட்டி எழுப்பி இளைஞர்களை போராட்டத்தில் பங்கேற்க வைத்துபெரும் பணிபுரிந்த அன்னாரை அழிப்பதால் புலிகளின் போராட்டத்தை அடக்கலாம் எனஎம்மவர்களே கனவு கண்டார்கள். ஆனால் அது பலிக்கவில்லை எம்மவர்களாலேயே அவர் கொலை செய்யப்பட்டது மிகுந்த வேதனையை தருகிறது. புலிகளின் வரலாறுதனியான வரலாறு. போராளிகளை அழித்தாலும் சரி போராட்ட உதவியாளர்களைஅழித்தாலும்சரிமேலும் மேலும் எமது போராட்டம் முன்னெடுத்துச் செல்லும். எமது போராட்டத்தை அழிக்கவோ ஒடுக்கவோ முடியாது ''

இப்படி அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர்நாயகம் திரு. யோகி பேசுகையில் கூறியதாவது.

எம்மைஎவரும்ஏமாற்றிவிட முடியாது.எமது சுயநிர்ணய உரிமையை நாம்ஒருபோதும் விட்டுக் கொடுக்கமாட்டோம் கிழக்கு மாகாணத்திலேபடைகள் குவிக்கப்படுவது .ஏனைய தமிழ்க் குழுக்களுடன் பேசுவது, குண்டு வீச்சு விமானங்கள் தமிழ்பகுதிகளில் வேவு பார்ப்பது போன்ற நடவடிக்கைகள் இலங்கைஅரசுமீது எமக்கு அவநம்பிக்கையை தோற்றுவித்துள்ளது. நேர்மையாக உண்மையாக இதய சுத்தியுடன் நடக்க வேண்டும் என அரசுக்குகூறியுள்ளோம். முன்புதமிழ் தலைவர்களுடன் ஒப்பந்தங்கள் செய்துபின்னர் அவற்றை கிழித்தெறிந்தது போன்று இனியும் நடக்க விடமாட்டோம். இலங்கை அரசின் போக்கில் மாற்றம் ஏற்பட்டால் எமது அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்படும்.

இப்படி அவர் கூறினார்.

தியாகி கருணாநந்த சிவம் குறித்து எழுதப்பட்ட ''வீர காவியம்' என்னும்நூல்வெளியீடும் இடம் பெற்றது.

மற்றும் முன்னாள் அதிபர் திரு. பரஞ்சோதி பொன் சணேசமூர்த்தி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த செல்வி பானு உட்படப் பலர் உரையாற்றினர். (இ-68)

## அலரிக்காய் தின்று மரணம்

யாழ்ப்பாணம், மே 24

தொய்வு வியாதியால் அவஸ்தைப்பட்ட இளம் பெண் ஒருவர் அலரிக்காய் சாப்பிட்டு உயிரை மாய்த்துக் கொண்டார்.

நாயன் மார்கட்டைச் சேர்ந்த மார்க்கண்டு, தர்மினி( வயது 27 ) என்பவரே இறந்தவர் ஆவார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ்.எஸ். பிரான்சிஸ் தற்கொலை என தீர்ப்பளித்தார். [ இ - 10 ]

## தமிழுக்கு முக்கியத்துவம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலைய பெயர்ப்பலகைகளில் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (இ-ரி)

# இனக் கலவரங்களால் பயந்தே இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பித்தனர்

### அவர்களை நாடு கடத்துவது மனிதாபிமானமற்றது

நுவரெலியா, மே 24

இந்திய குடியுரிமைக்கு விண்ணப்பித்த பலர் தற்பொழுது தங்கள் முடிவை மாற்றிக் கொண்டு இலங்கையில் வாழ விரும்புகிறார்கள். அவர்களுக்கு இந்த உரிமை மறுக்கப்படக் கூடாது.

அவர்களை நாடு கடத்த முனைவதனை தனி மனித சுதந்திரத்திற்கும், மனிதாபிமானத்திற்கும் அப்பாற்பட்ட தண்டனையாகவே அவர்கள் கருதுகிறார்கள். இது இந்தச் சமூகத்திற்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதியாகவே இருக்கும்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு. பெ. சந்திரசேகரன், பெருந்தோட்டத் தொழிற்றுறை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவிற்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித்திருக்கின்றார். பிரஸ்தாப கடிதத்தை திரு. சந்திரசேகரன் இம் மாதம் 4 ஆம் திகதி எழுதியிருந்தார்.

திரு. சந்திரசேகரன் இம் மாதம் 15 ஆம் திகதி கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு இம் மாதம் 21 ஆம் திகதி நுவரெலியா நீதி மன்றத்தினால் ஆள்பிணையில் விடுக்கப்பட்டது தெரிந்ததே.

திரு சந்திரசேகரன் அமைச்சர் விஜேரத்னாவிற்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா செல்லவிரும்புவோரிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போது குறிக்கப்பட்ட எண்ணிக்கையை விட குறைவானவர்களே அதற்கு விண்ணப்பித்தார்கள் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

இலங்கையில், அதன் பின்னர் அடுத்தடுத்து நடந்த இனக்கலவரங்களினாலும், இனவாத நடவடிக்கைகளினாலும் பாரதூரமாக பாதிக்கப்பட்ட இந்திய வம்சாவளியினர் அச்சத்தினால் இந்தியாவுக்குப் போயாவது தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும், எண்ணத்தோடு இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இலங்கையில் சுதந்திரமாக வாழலாம் என்ற நம்பிக்கையை ஊட்டவோ இவர்களின் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை எடுக்கவோ எவரும் முன்வரவில்லை.

எனவே நிதானமாக சிந்தித்து முழுமன நிறைவோடு முடிவெடுக்கக்கூடிய சூழல் இவர்களுக்கு அமையவேயில்லை. தற்போது இவர்கள் தங்கள் முடிவை மாற்றிக் கொண்டு இலங்கையில் வாழ விரும்புகிறார்கள். அவர்களுக்கு அந்த உரிமை மறுக்கப்படக் கூடாது. மேலும் இந்தியாவிற்கு விண்ணப்பித்தவர்களின் இரண்டாவது அல்லது மூன்றாவது தலைமுறையினரும் கூட இன்று மலையகத்தில் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தியாவில் எவ்விதமான தொடர்புமற்ற - இந்தியாவைப் பற்றியே எதுவும் அறியாத - இவர்கள் இந்தியாவுக்குப் போகத் தயங்குவது இயல்பானதும், நியாயமானதுமாகும்.

ஏற்கனவே இவர்களின் முன்னோர்கள் அறியாமையால் எடுத்த முடிவை இப்போதுள்ளவர்கள் ஏற்கவேண்டுமென நிர்ப்பந்திப்பதனை தனி மனித சுதந்திரத்துக்கும், மனிதாபிமானத்துக்கும் அப்பாற்பட்ட தண்டனையாகவே இம் மக்கள் கருதுகிறார்கள். இது இந்தச் சமூகத்துக்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதியாகவே இருக்கும்.

மலையக மக்களை இந்தியாவுக்கு அனுப்ப எடுக்கப்படுகின்ற சகல நடவடிக்கைகளும் அம்மக்களின் விருப்பத்திற்கு மாறானதும், நேரடியான அல்லது மறைமுகமான பலாத்காரத்தைப் பிரயோகிப்பதைத் தவிர வேறு எவ்வகையிலும் நடைமுறைப் படுத்தப்பட முடியாததுமாகும்.

ஏற்கனவே பலமுறை இம் மக்களின் விருப்பத்தை அறியாமல் தன்னிச்சையாக இரு நாடுகளும் செய்துகொண்ட ஒப்பந்தங்களைப்போல், மேலும் ஒரு துரதிர்ஷ்டமான ஒப்பந்தம் ஏற்படுத்தப்படாமல் இருக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம். - இவ்வாறு அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (அ-58)

## Pass List...:

(Contd. from Page 3)

Anuradha Thurairajah
Mary Anne Shyamala Devasakayam
Rachel John
Arulpragasam Gabriel
Banumathy Shandrasekeri
Ponmalar Kirishnapillai
Maria Judine Dharashi Theophilus
Thushitha Thiagarajah
Manickkavasagar Vickeswaramoorthy
Jennifer Subothini Antonipillai
Abvanced

**Ist CLASS PASS**

Shanthikumar Ariyaratnam
Ruth Jebaranjini Ariyaratnam

**PASS**

Vasuvatha Thillainathan
Maria Judine Dharshi Theophilus
Mary Anne Shyamala Devasagayam
Prami Sivabalasunderam
Sugirthacumary Saravanapavananthan
Banumathy Shandrasekeri
Kalarany Navaratnam
Sathasivam Tharmarasah
Ponmalar Kirishnapillai
Nadarajah Maneeswaran
Packianathan Packiarajah
Selladurai Thevaranjan
Uma Muthuthamby
Dhamayanthi Rasarathinam
Jennifer Subothini Antonipillai
Somasundram Eclanesan
Pancras Noel Robinson

## மரண அறிவித்தல்கள்

### வி. கந்தையா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஸ்கந்தபுரத்தினை வசிப்பிடமாகக் கொண்டவரும், தலைவரென அழைக்கப்படுபவருமான வீ. கந்தையா (முன்னாள் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர்) 23-05-1990 இல் காலமானார்.

இவர் கண்ணம்மாவின் அன்புக் கணவரும், சுலோச்சனா (கமநல சேவை நிலையம், அக்கராயன்குளம்), பேதீஸ்வரன், மாலதி (ஜேர்மனி), றஞ்சனா, பாமினி ஆகியோரின் தந்தையும், புண்ணியமூர்த்தி (தீபா போட்டோஸ், ஸ்கந்தபுரம்), செல்வேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், பிரதீபா, பிரதீபன், ஜெனதீபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிச் சடங்குகள் 24-05-1990 வியாழன் பிற்பகல் ஸ்கந்தபுரம் பொதுமயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ஐ. புண்ணியமூர்த்தி (மருமகன்)
141, ஸ்கந்தபுரம்.
[3636]

### திருமதி பூரணம் சொர்ணலிங்கம்

அச்சுவேலியைச்சேர்ந்த திருமதி பூரணம் சொர்ணலிங்கம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சொர்ணலிங்கத்தின் அன்பு மனைவியும், கேமேஸ்வரி, கேமேந்திரன், இரவீந்திரன், ஜதீந்திரன், தியாகேந்திரன், கயிலேஸ்வரி, இராஜயோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசரத்தினம், துரைஐயா, தம்பிஐயா, கீர்த்திசிங்கம், திரவியம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பரமேந்திரன், கலாதரன், ஜெகநாதன், ஞானகலாம்பிகை, குணேஸ்வரி, மங்கயற்கரசி, சிவானந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரயுக்குமார், வசந்தினி, நந்தகுமார், சுமதினி, ஆனந்தகுமார், காயத்திரி, ஜனகன், கார்த்திகன், கௌதமன், கயந்தன், சிந்துஜா, அகல்லியா, அபிராமி, செந்தூரன், மேனகா, சஞ்சேயன், அகிலன், ஆரபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-05-1990 வியாழன் காலை 8-00 மணியளவில் அச்சுவேலியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

துரைஐயா அவெனியு,
சன்னதி வீதி,
அச்சுவேலி.
தகவல்:
சொ. ரவீந்திரன்
[3632]

### திருமதி ஸ்ரனிஸ்லாஸ் தம்பிமுத்து

ஊர்காவற்றுறை சரம்பொனைச் சேர்ந்த திருமதி ஸ்ரனிஸ்லாஸ் தம்பிமுத்து (23-5 90) சில்லாலையில் காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பிமுத்துவின் அருமை மனைவியும், இராணியம்மா, நல்லம்மா, புலோமினம்மா (பிரான்ஸ்), பொன்ராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும், அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற அருளானந்தம், பாக்கியநாதர் (பிரான்ஸ்), சாந்தினி [பிரான்ஸ்] ஆகியோரின் அருமை மாமியாரும், திருமதி யோசேப்பினா டோமினிக் காலஞ்சென்றவர்களான யோசவ் வேடினன், சேவியர் வேடினன் ஆகியோரின்அருமைச் சகோதரியும், சறோயா[ஜேர்மனி], ராஜினி (ஜேர்மனி) அல்பிறெற் [கனடா],விஜயகுமார்இங்கிலாந்து,றேமன்[பிரான்ஸ்], ராஜ்குமார் [பிரான்ஸ்], கவிதா (ஜேர்மனி), கீதா (பிரான்ஸ்), ரஜனி (அவுஸ்திரேலியா), ஜீன் (அவுஸ்திரேலியா), ரவிராஜ் (இங்கிலாந்து) ஆகியோரின் பேத்தியாரும், அர்ச்சுனா, ஆன்சன், சஞ்சீவ்குமார், அனற்றா, மக்நிஜாந்தன், றிக்கவில்சாந்த், இராணியா, வியோனா, மெனலியூலியன், ஷாமின் ஸ்டவனி, சத்தியா ஆகியோரின் பூட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று [24-5-90] வியாழக்கிழமை சில்லாலை கதிரைமாதா சேமக்காலையில் பிற்பகல் 3 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

புனித மரியாள் வீதி,
சில்லாலை.
தகவல்;
B. அந்தோனிப்பிள்ளை
[13264]

### சபாரட்ணம் சுப்பிரமணியம்

[மின்சாரசபை ஊழியர் சுன்னாகம்]

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சபாரட்ணம் சுப்பிரமணியம் 22-5-90ல் காலமானார். அன்னார் மகேசன் (லண்டன்), பரமேஸ்வரி, சண்முகநாதன், பாலகிருஷ்ணன், செல்வராசா, கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 24-5-90 காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
தகவல்!
ந. கடம்பேஸ்வரன்
(13266)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org